# சாளரம்

விலை 15/-

மார்ச் - ஏப்ரல் 1995



★ வாடிக்கையாளரின் மனம் கவர்ந்த நாயகன்

# பாண்டியன்

★ தேவையான அனைத்துப்
பொருட்களையும் ஒரே
இடத்தில் பெற
மக்கள் மனங்களில்
உதிக்கும் பெயர்



## பாண்டியன்

★ நியாய விலையில் தரமான பொருட்களை
நீங்கள் எதிர்பார்க்கும்போது ஞாபகம்
வரவேண்டிய பெயர்

# பாண்டியன்

# இந்த இதழில்


- அறிவுலகம்
  - கேள்வி பதில்
- சூரியன்
  - நிலாமுற்றம்
- விளையாட்டு
- சூழலியல் வெளிக்களச்சுற்றுலா
- இறக்கை இல்லாத பறவைகள்
  - மாணவர் பக்கம்
- ஈழத்தில் ஓவியக்கலை
- வான்வரை பாய்ந்துள்ள புலிகள்

இன்னும் பல அம்சங்கள்


தாயக விடுதலைக்குத் தம்மை அர்ப்பணிக்கும் தெரிவிற்கும், கல்வி கற்கும் உரிமைக்கும் இடையில் நாம் என்றுமே முரண்பாட்டைக் கற்பிக்கமுயலவில்லை. இரண்டுமே எமது சமூகத்தின் வாழ்வியக்கத்திற்கு இன்றியமையாதவை. போரும், கல்வியும் இணைந்த ஒரு வாழ்வு இன்று எமது வரலாற்றின் தேவையாக உள்ளது.

தேசியத் தலைவர் வே. பிரபாகரன்



உங்கள்
கவிதைக்கான
ஓவியம் இது

அன்பளிப்பு:- உதயராஜ்

சாளரம் கதவு 4 (32) காற்றலை 16

# அர்த்தமிழந்துபோன 'அமைதித் தீர்வும்' மூன்றாம் ஈழப்போரின் புதிய பரிமாணமும்.

சந்திரிகா அரசின் 'சமாதானப் பேச்சுவார்த்தை' முறிவடைந்து மூன்றாம் ஈழப்போர் ஆரம்பமாகிவிட்டது.

ஆறு மாதங்களுக்கு மேலாக நடைபெற்ற கருத்துப்பரிமாற்றங்கள் நடைமுறைச் செயற்பாடற்றுப் போனதால் 'சமாதான முயற்சி' கானல் நீர்போல் காணாமற் போயிற்று.

இத்தோல்விக்கான முழுப்பொறுப்பையும் சிங்கள அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இலங்கையில் இன்றுள்ள மிக முக்கியமான எரிந்து கொண்டிருக்கிற பிரச்சினை இனப்பிரச்சினைதான். அதற்குப் பரிகாரம் காண்பதென்பது மிகுந்த பொறுப்புணர்வுள்ள, ஆளுமைக்குட்பட்ட விடயமாகும்.

இந்தச் சிக்கலான பிரச்சினையைப் புதிய அரசும் சிறுபிள்ளைத் தனமாகவே அணுகியது என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

நடைமுறைப்படுத்தப்படாத உறுதிமொழிகளும், இழுத்தடிப்பும், நழுவல் தன்மைகளுமே பேச்சுக்கள் முறிவடைவதற்கான காரணங்கள்.

எரிகின்ற நெருப்பைத் திரையிட்டு மறைத்துவிட்டு, உலக நாடுகளை ஏமாற்றவும், உதவிகள் பெறவும்தான் பேச்சுவார்த்தைக் காலம் பயன்படுத்தப்பட்டது.

விடுதலைக்காகப் போராடுகின்ற ஓர் இனத்தை முடக்கிவைப்பதுதான் 'அமைதி நிலை' என்று அர்த்தம் கற்பிக்க முயன்றமை அரசின் மிகப்பெரிய தவறு. ஒரு சாதாரண அரசியற் கட்சியுடன் வேண்டுமானால் இந்த 'நாடகம்' பயனளிக்கலாம். ஆனால் உயிரையே ஆயுதமாகக்கொண்டு மண்மீட்க எழுந்துவிட்ட போராளிகளைக்கொண்ட ஒரு தேசிய விடுதலை அமைப்புடன் இந்த 'இராஜ தந்திரங்களும்' 'காய் நகர்த்தல்களும்' தோற்றுத்தான் போகும்.

அரசின் இரண்டு விமானங்களை அடுத்தடுத்துத் தாக்கி வீழ்த்தியதன் மூலம் மூன்றாம் கட்ட ஈழப்போர் புதிய பரிமாணத்துடனும், புதிய எழுச்சியுடனும் முனைப்புப் பெற்றுவிட்டது.

எமது விடுதலைப் போராட்டப் பயணம் 'தமிழீழம்' என்ற புள்ளியில்தான் முற்றுப்பெறும் என்பதை வரலாறு தீர்மானித்து விட்டதாகவே தோன்றுகிறது.

ச. சந்திரமோகன்,
குளவிசுட்டான், நெடுங்கேணி


☐ சனத்தொகை பெருகிக் கொண்டு போகின்றதே; எதிர்காலம் எப்படி இருக்கும்?

மனிதர் மூச்சு விட்டு, திரும்ப நல்ல வளியை எடுக்கமுடியாது போகும்...அவ்வளவுதான். அதற்குப் பிறகு மோகனும் அவுட்... உங்கள் ஆனந்தி அக்காவும் அவுட்...

த. மஞ்சுளா,
வேலங்குளம், நெடுங்கேணி

☐ மனிதன் எப்போது இயந்திரங்களைக் கண்டுபிடிக்க ஊக்குவிக்கப்படுகின்றான்?

மனிதன் இயந்திரமயமாகும் போது வேலைப்பளு அவனை அழுத்தத் தொடங்கியதும்......




சு. சுரேஷ்காந்,
வெற்றிலைக்கேணி ப. க. ம. வி.
முள்ளியான்.

☐ தமிழீழத்தின் வளங்களுள் சிறந்த முறையில் பயன்படுத்தப்படாமலும், பயன்படுத்தப்பட்டும் வருகின்ற வளம் எது வென்று குறிப்பிடுவீர்களா?

மனிதனும், வளியும்

அன்பான வாசகர்களுக்கு,

கடந்த இதழில், அறிவுலகம் கேள்வி பதிலில் 'பிரான்சிஸ் ராஜசுலோசனாவின், ''விண்ணில் இருக்கும் செயற்கைக் கோள்...'' தொடர்பான கேள்விக்குரிய பதிலில், வரும் வெற்றிடத்தில்'' TRANS PONDER என்ற ஆங்கிலச் சொல்லைச் சேர்த்துவாசிக்கவும்.

— ஆனந்தி —

# கேள்வி — பதில்

மௌ. மதுவர்மன்
மு/வித்தியானந்தாக் கல்லூரி, முள்ளியவளை

☐ *ஆகாய கங்கை என்பது என்ன?*

வானத்தில் பல கோடிக் கணக்கான விண்மீன்கள் காணப்படுகின்றன. இவ்வாறு காணப்படுகின்ற விண்மீன்களில் பல கோடிக் கணக்கான விண்மீன்கள் அடங்கிய வெண்மையான கூட்டமே ஆகாயகங்கை (Galxy) என அழைக்கப்படுகின்றது. இத்தகைய விண்மீன்களின் அடர்ந்த ஒளிப்பட்டை வெண்மையாக நீண்டு காணப்படுவதால் இவை பால் வீதி என்றும் அழைக்கப்படுகின்றன. உங்கள் தலைக்கு மேலே வானத்தை அண்ணாந்து பார்த்தால் இத்தகைய பால் வீதிகளைக் காணமுடியும். சீனர்கள் இதனை தேவலோகத்து நரி என்றும் கிரேக்கர்கள் சொர்க்கத்தின் பாதை என்றும் குறிப்பிடுவார்கள்.

பா. முரளீதரன்
யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.

☐ *காட்டூன் படங்களில் வரும் பொம்மைகளை எவ்வாறு தயாரித்து அற்புதமாக நடிக்கச் செய்கின்றார்கள்?*

காட்டூன் படம் என்பது மிக அற்புதமான தொழில் நுணுக்கம் நிறைந்த கலை, முரளி......! ஒரு விலங்கையோ அல்லது ஏம்தனும் ஓர் அசையும் உருவத்தையோ நடிக்கச் செய்வதற்கு அந்த உருவத்தின் ஓர் அசைவுச் செயற்பாட்டிற்கு மட்டும், பல ஆயிரக் கணக்கான படங்களை ஒவ்வொரு படி நிலையாக வரைந்து அவற்றை அசையும் படலங்களில் (மூவி) எடுப்பார்கள். உதாரணமாக, ஒரு பூனைக் குட்டி நிலத்தில் இருந்து ஒரு காலை உயர்த்துவதைக் காட்ட அதனைப் பல படிமுறைகளில் ஒவ்வொரு சிறிய அசைவுக்கும் பல ஆயிரக்கணக்கான படங்களை வரைந்து கொள்வார்கள் என்றால் யோசித்துப் பாருங்களேன்; ஒரு மணித்தியால ''மிக்கி மவுஸ்'' போன்ற காட்டூன் படங்களைத் தயாரிப்பதற்கு எத்தனை இலட்சம் படங்கள் வரைந்திருப்பார்கள் என்று! இந்தத் துறையில் பிரபலமான காட்டூன் தயாரிப்பாளர் என உலகமேபோற்றும் முன்னோடி வோல்ற் டிஸ்னி...!

# தளராதே

மௌனித்திருக்கும்
மனிதனே!
இது உனது கோழைத்
தனத்தின் வெளிப்பாடு
அல்ல!
சுதந்திரக் கோபுரத்தின்
நிமிர்வு!

சுமைகளில் இருந்து
தப்பிக் கொள்ள
நிம்மதி கேட்டதன்
நிலைமை!
மனம் என்பது
எல்லோரும் கூறுவது போல்
இதயம் இல்லை
அதனால் தான்
கற்பனைப் புறா கூட
உனது கண்களை
மறைக்கின்றதோ!

இனிமையான புல்லாங்குழல்கூட
ஓட்டை போடும் போது
ஓலமிடத்தான் வேண்டும்!
தாத்தா நட்ட சிறியவிதை
இங்கு விருட்சமாகவுள்ளதே!

அதேபோல தான்
இந்த விடுதலை விதையும்
நிச்சயம் உனக்கு நிழல் தரும்
அதுவரை உறுதியாகப்
பற்றிப் பிடித்துக்கொள்
உனது கரத்தை

— ப. தயாளன் —
தாவடி

**1995 பெப்ரவரி மாத ஓவியக் கவிதை இது!**

## இளமுற்றம்

# சூரியன்

இப்போதெல்லாம் வெளியே தலை காட்ட முடிவதில்லை. அவ்வளவு வெப்பம்:

மழைபோல் வெயிலும் எம்மை நனைத்து விடுகின்றது,

வீதியில் நடக்கும் போது, கால்கள் நிழல் விரிப்புக்களை நாடிச் செல்கின்றன.

சுட்டெரிக்கும் இந்தச் சூரியன் மீது சில சமயம் எரிச்சலும் கோபமும் உண்டாகின்றது.

என்றாலும் — எமது இந்தக் கோபம் அந்தச் சூரியனை என்ன தான் செய்துவிடப் போகின்றது? அது சூரியன் மீதான நாய்க் குரைப்பாகவே இருந்துவிடும்.

இந்த வெப்பக் காலத்தில் —யுனெஸ்கோ கூரியர்' தனது மார்ச் மாத இதழை ''சூரியச் சிறப்பிதழாகத் தயாரித்துள்ளது.

பண்டையபுராணங்கள்தொடக்கம் இன்றைய தொழில் நுட்பம் வரை சூரியனின் முக்கியத்துவம் அதில் விளக்கப்பட்டுள்ளது.

'மனிதரின் புராணங்களில் நாயகமான கோளமாகவும், புதிய தொடக்கங்களின் சின்னமாகவும் ஒளிக்கும் வெப்பத்திற்கும் உயிருக்கும் படைப்பிற்கும் ஆதாரமாக விளங்கும் கதிரவன் இப்போது அறிவியல், தொழில்நுட்ப முன்னேற்றம்காரணமாக, பயன்படுத்தத்தக்க மாபெரும் எரியாற்றல் ஆதாரமாகத் திகழ்கிறது. 'எல்லோருக்கும் கதிரவன்' என்னும் கொள்கையைச் செயற்படுத்தும் இந்த எரியாற்றல் மிகப்பெருமளவு மக்களுக்கும் பயன்படுமாறு செய்வது நம்கடமையாகும்.

இவ்வாறு 'கூரியர்' தனது ஆசிரியத் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

சூரியனைக் கடவுளாக வழிபடுகின்ற மரபு எம்மிடையே பழங்காலந்தொட்டு இருந்து வருகின்றது. அதற்கான சடங்குகள்கூட உள்ளன.

சூரிய நமஸ்காரம் செய்தல், பொங்கல் வைத்துச் சூரியனை வணங்குதல் போன்ற வழிபாடுகள் சாதாரணமாகத் தமிழர்களிடையே காணப்படும் நிகழ்வுகளாகும்.

மக்கள் வாழ்வோடும், போராட்டங்களினோடும் சூரியனைக் குறியீடாகப் பார்க்கும் தன்மையும் உண்டு. சுதந்திரம், வளமான வாழ்வு போன்றவற்றின் குறியீடாகச் சூரியன் திகழ்கிறது. 'விடி

யல்' என்கிறபதம் நம்மத்தியில் இன்று சாதாரணமாக உலவும் ஒன்று.

சூரியனைக் கடவுளாகவழிபடும் பண்பாடு, சூரியனைப் பற்றிய சுவாரஸ்யமான கதைகள் என்பன நம்மிடையே மட்டுமல்லாது, உலகின் பல நாடுகளில் வாழும் மக்களிடமும் தொன்மைக் காலந்தொட்டே வழக்கத்திலிருந்து வருகிறது.

கிரேக்கம், எகிப்து' இங்கிலாந்து, ஜப்பான், இத்தாலி, பிரான்ஸ், ஈரான், சீனா, அவுஸ்திரேலியா, ஆபிரிக்கா மற்றும் போல்சிக் நாடுகள் போன்ற எல்லா இடங்களிலும் இதனைக் காணலாம்.

இந்த நாடுகளின் பழைமையான ஓவியங்கள், சிற்பங்கள் என்பன இதற்கு ஆதாரங்களாகச் சான்றுபகர்கின்றன.

'கதிரவன் ஒளியுணர்வு ஜப்பானிய ஓவியங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளில் வெளிவிடப்பட்ட சட்ட அரசாணைகளுக்குப் பின்னால் ஜப்பான் அரசியல் சட்டவியல், நீதியியல், மதிப்பீடுகளுக்கு இவை அடிப்படையாக அமைந்தன. இவை அடிக்கடி ''கதிரவனின் துலக்கமான, கலப்பற்ற, நேர்மையான, உண்மையான இதயம்'' பற்றிக் குறிப்பிடுகின்றன.

இந்த அருங்குணங்கள் ஜப்பானிய அழகியல், கலை, இலக்கியங்களிலும் இணைக்கப்பட்டுள்ளன.

ஜப்பானியப் பண்பாட்டில் கதிரவனுக்குள்ள பரந்த செல்வாக்கு 'ஹைக்கூ' கவிதையில், அழகு எழுத்துக்களை உருவாக்கல், கையால் எழுதப்பட்ட பத்திரங்கள், தேநீர்ச் சடங்கு, கிண்ணத்தில் மலர்களை அழகுபடப் பொருத்துதல், தோட்ட வடிவமைப்பு ஆகியவற்றில் காணலாம்.

இவ்வாறு சூரியர் கட்டுரையொன்று குறிப்பிடுகின்றது.

இன்று வளர்ந்து வரும் தொழில் நுட்பங்களிலும் சூரியனின்பணி அளப்பரியது.

வளர்முக நாடுகளில் பல்லாயிரக்கணக்கான கிராமவாசிகள் சூரியனின் எரியாற்றல் மூலம் தமது தேவைகளை நிறைவு செய்து கொள்கின்றனர்.

கலிபோர்னியாவில் உள்ள சூரிய மின்விசை உற்பத்திநிலையம், அவுஸ்திரேலியாவிலுள்ளவை, இந்தியாவில் உள்ளவை என பல்வேறு விபரங்கள் சூரியரில் காணப்படுகின்றன.

இதனைப் பார்க்கும் போது, மின்சாரமின்றி, கொழும்பைப்

பார்த்துக்கொண்டு நிற்கும் எமது நிலைப்பாடுகளும் மனதில் வந்து நிற்கின்றன.

இப்போது யாழ் நகரின் வியாபார நிலையங்களில் சூரிய மின்சாதனங்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருப்பதைக் காண முடிகிறது. இதனை எத்தனை பேர் பயன்படுத்துகின்றனர் என்பது தெரியவரவில்லை.

பிற நாடுகளில், சூரியன் மீதான அறிவியல் தொழில் நுட்பங்கள் பற்றிய பாட போதனைகள் மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் முக்கியமாகப் போதிக்கப்படுவதாக அறியக் கிடைக்கிறது.

நாமும் இதுபற்றிச் சிந்திக்கலாம் அல்லவா? இறுதியாக, சூரியர் கட்டுரையொன்றில் வெளியான இன்னொரு தகவல் ஒன்றையும் சொல்லி இந்த நிலா முற்றத்தில் இருந்து விடை பெறலாம் என எண்ணுகின்றேன்.

'சூரியன் சுமார் ஆயிரம் கோடி ஆண்டுகள் வாழக்கூடும். சூரியன் தோன்றி 450 கோடிஆண்டுகள் கடந்துவிட்டன. அதற்கு இப்போது நடுத்தரவயது.

இதுவரை கடந்த ஆண்டுகள் அளவிற்கு அது 'ஹைட்ரஜனை' எரிக்கும்; நிலையாக நிற்கும். ஆயிரங்கோடி ஆண்டுகள் கடந்த பின்பு கதிரவன் விரிவடையும். அதன் வெளிப்புற வெப்பநிலை இப்பொழுதுள்ள 580$^\circ$ கோடியிலிருந்து பாதி குறைந்து விடும்.

பின்னர் வானவியலாளர் கூறுவது போல சூரியன் 'சிவப்பு ராட்சஷன்' ஆகிவிடும். இப்போது இருப்பதை விட ஐம்பது மடங்கு பெரிதாகவும் 300 மடங்குகூடுதற் பிரகாசத்துடனும் இருக்கும்.

பூமியில் அப்போது வாழ்க்கை நரகமாகிவிடும். சூரியனின் எரி பொருள் குறைந்து விடும் நிலையில், அது சுருங்கத் தொடங்கும். அதன் பிரகாசத்தையும் இழக்கத் தொடங்கும். நாளடைவில் பிசாசு நட்சத்திரங்களில் ஒன்றாகி இந்தப் பிரபஞ்சத்தில் அலையத் தொடங்கும்.

எனவே, இன்னும் ஐந்நூறு கோடி ஆண்டுகளில் இந்த உலகத்திலிருந்து நாம் வெளியேற வேண்டி இருக்கும்.

— விவேக் —

# விளையாட்டு


## சென்றல் - சென் ஜோன்ஸ்
## இவ்வருடத் துடுப்பாட்டப் போட்டி

துடுப்பாட்டம் (கிறிக்கெற்) ஒரு கனவான்கள் விளையாட்டு. ஏனைய விளையாட்டுக்கள் போல இல்லாது, இவ்விளையாட்டிற் பார்வையாளர்களிடையே மோதல்கள் மிகவும் குறைவு. களத்திலே விளையாடும் வீரர்கள்போட்டி நேரத்தில் தமது நடத்தைகள் எதிலும் தங்கள் கனவான் தன்மையை நிரூபிக்க முயற்சிப்பது, பார்ப்பதற்கு மிகவும் இன்பமானது. போட்டி நடக்கும்போது சிக்கலான நிலைகள், நெருக்கடிகளில் விளையாட்டு மனப்பாங்கோடு சேர்ந்த தெளிவு ஏற்படும்போது, அப்போட்டியோடு ஒன்றிணைந்தவர்களுக்கு ஒரு பூரிப்பு. இதுதான் விளையாட்டு என, தானே வாய் சொல்லும். அதுதான் துடுப்பாட்டம் என அனைவரும் சொல்லுவர்

வருடா வருடம் இப்பெருவிழாவிற்காக யாழ்நகர் தனிக்கோலம் பூணும். இவ்வருடமும் சென்றல் - சென். ஜோன்ஸ் 91 வது கிறிக்கெற் போட்டிக்காக, ஒரு மாதத்திற்கு முன்பே இருபாடசாலைக் கொடிகளும் மாணவர்களின் கைகளில், வாகனங்களில் என ஒரே அமர்க்களம். துடுப்பாட்ட ரசிகர்கள் இந்நாளை மிகவும் ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர்.

சென்ற மார்ச் 17, 18 ஆம் திகதிகளில் மத்திய கல்லூரி மைதானம் சிவப்பு கறுப்பு இணைந்த, நீலம் மண்ணிறம் கலந்த சென். ஜோன்ஸ், சென்றல் கல்லூரிகளின் கொடிகளால் அலங்காரம் பெற்றிருந்தது. ரசிகர்கள் வழமை போல் மிகவும் உற்சாகமாக வருகைதந்தனர்.

பூவா தலையா போட்ட அணித் தலைவர்களில், சென் ஜோன்ஸ் அணித் தலைவர் தனது அணியை முதலில் துடுப்பாட அழைத்தார்.



*மத்திய அணி வீரர்கள்*

தமிழீழத்தின் தேசியக்கொடி தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் இன்பன் அவர்களால் ஏற்றப்பட, இரு பாடசாலை அதிபர்களும் தத்தமது கல்லூரிக் கொடிகளைக் கம்பங்களிற் பறக்கவிட்டனர். கல்லூரி அணிகள் இரண்டினதும் வீரர்கள் முன்னாள் ஒலிம்பிக் வீரர், மத்திய கல்லூரிப் பழைய மாணவர் கலாநிதி. எதிர் வீரசிங்கத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டனர்.


இருபாடசாலைகளினதும் பழைய மாணவர்களின் ஆரவாரங்களோடு அணிகள் இரண்டும் களம் புகுந்தன. சென். ஜோன்ஸ்கல்லூரி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ராஜேந்திரன், கௌரிபாலன் இருவரும் ஆட்டத்தை மிகவும் சிறப்பாக ஆரம்பித்தார்கள். இருவரும் 63 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர். ஆனால், தொடர்ந்து ஆடிய வீரர்களினது 05 விக்கற்றுகள் 125 ஓட்டங்களிற்குள் வீழ்ந்தமை, சென். ஜோன்ஸ் அணிக்கு மிகவும் சோர்வைத்தந்தது. மத்தியகல்லூரி வீரர்களது தாக்குதல் மிகவும் வேகமாகவும் உறுதியாகவும் இருந்தது. ஆனால் அடுத்துச் சேர்ந்த சோடி அரவிந்தனும், நிரோஷனும் தமது அணியின் நிலையை ஒரு ஸ்திர நிலைக்குக் கொண்டு வந்தார்கள். அவர்களது ஆட்டம், தமது அணியினது ஓட்டங்களை 181 க்கு உயர்த்தியது.

பரி. யோவான் தனது முதலாவது ஆட்டத்தை 233 ஓட்டங்களோடு முடித்துக்கொண்டது.

மத்தியகல்லூரியினது முதலாவது ஆட்டம்மிகவும் சோகமான ஒரு சம்பவம். பரி. யோவான் அணித் தலைவன் ஸ்ரீதரனது பந்து வீச்சுக்கு மத்திய கல்லூரி வீரர்கள் எதிர்கொள்ள முடியாது நிலை தடுமாறி நின்றனர். 27 ஓட்டங்ளுக்கு 06 விக்கற்றுக்களைப் பறி கொடுத்த பரிதாபம், மத்தியகல்லூரி ரசிகர்களிடையே ஓர் உற்சாகத் தொய்வை, அமைதியைக் கொண்டு வந்தது. இந்தநிலையில் மத்தியகல்லூரி அணி உப தலைவன் அமலனும், வீரன் சண்முகலிங்கமும் முதல் நாள் ஆட்டம் முடியும் வரையும், பொறுமையுடன் தமது அணியினது நலன் காத்து ஆடிய ஆட்டம், அன்றைய போட்டி 06 விக்கற்றுக்ளுக்கு 71 ஓட்டங்கள் என்றநிலையில் முடிவுற வழிசமைத்தது.

அடுத்த நாள் 18ஆம் திகதி காலை, போட்டி மிகவும் விறு விறுப்பாக ஆரம்பித்தது. இருபக்க ரசிகர்களும் தத்தமது அணிக்காக உரமேற்றினர். எல்லாருடைய எதிர்பார்ப்பும் ஒன்றாகவே இருந்

பரியோவான் அணி வீரர்கள்



தது. இவ்வருடம் பரி. யோவான் கல்லூரி மிகப் பெரும் வெற்றி பெறும் வாய்ப்புஇருப்பதாக நம்பி னர். ஆனால், தொடர்ந்தும்ஆடிய மத்திய கல்லூரி அணி உபதலை வன் அமலன் 79 ஓட்டங்களைப் பெற்று, தனது அணியின் தோல் வியைத்தடுக்க அணைபோட்டமை தெளிவாகத் தெரிந்தது. இவ் வணிக்காகத் தொடர்ந்து விளை யாடிய கடைசி வீரர்கள் திலீபன், நிஷாகரன் ஆகியோரின் துடுப் பாட்டத்திறன், மத்திய கல்லூரி 188ஓட்டங்களைப்பெற்று முதலா வது ஆட்டத்தைமுடிக்கக் கைகொ டுத்தது.

இரண்டாவது ஆட்டம் ஆரம் பித்தது. சென். ஜோன்ஸ்வீரர்கள் விளாசித்தள்ளினார்கள். போட் டியின் நிலை தெரிந்து முன்னேறி னார்கள். முதல் நான்கு விக்கற் றுக்கள் 37 ஓட்டங்கள் பெற்ற நிலையில் சரிந்திருந்தாலும், தொடர்ந்து வந்த நிமலன் 59ஓட் டங்களைப்பெற்று அணிக்குத் தன்னம்பிக்கை ஏற்படுத்தினார். இவ்வணி வீரன் நிரோஷன் 101 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத் தமை குறிப்பிடத்தக்கது. மத்திய கல்லூரி இரண்டாம்ஆட்டத்தைத் தொடரமுடியாத நிலையில், இவ் வருடத்தின் இப்பெருவிழா சமநி லையில் முடிவுற்றது.

இவ்வருடப் போட்டியில், மத் திய கல்லூரி அமலன் கிறிக்கெற் றின் சகலபிரிவுகளுக்குமான ஆட்ட நாயகனாகவும், சிறந்த துடுப் பாட்ட வீரனாகவும் தெரிவுசெய் யப்பட்டான். பரி. யோவான் ஸ்ரீத ரன் சிறந்த பந்து வீச்சாளனாக வும், கௌரிபாலன் சிறந்த பந்து தடுப்பாளனாகவும், நிரோஷன் அதிகஓட்டங்களைப்பெற்றவீரனா கவும் தெரிவு செய்யப்பட்டனர். நடுவர்களாக திரு. முருகவேளும் திரு. செல்வராசாவும் சிறப்பாகக் கடமையாற்றினர்.

யாழ்நகரிலே துடுப்பாட்டம் ஒரு பிரபலமான ஆட்டமாக மாறிவரு வதும், பாடசாலைகள் பல, இக் கட்டான சூழ்நிலைகளிலும் இவ் வாட்டத்தை ஊக்குவிப்பதும், இக் கனவான் விளையாட்டு எதிர் காலத்தில் இன்னும் களைகட்டும் என்பதைச் சந்தேகமறநிரூபிக் கின்றன.

— அ. நிரூஷன் —

---

எப்போது ஏதோ ஒரு பணியில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதே இன்பம் தருவதாகும். இன்பம் என்பது தேங்கிக்கிடக்கும் குட்டையல்ல. ஓடிக்கொண்டிருக்கும் நீரூற்று

ஜோன்மேசன் குட்.

# மேலைநாட்டுச் சிரிப்பு

☐ ஆசிரியர் மாணவனிடம் கேட்டார்.

''சுதந்திரபிரகடனத்தில்யார் கையொப்பமிட்டது?''

''எனக்குத்தெரியாது.எனக்கு அதைப் பற்றி அக்கறை இல்லை''என்றான் மாணவன் சற்று மிடுக்கான குரலில்

மறுநாள் ஆசிரியர்அந்தமாணவனையும் அவனது தந்தையையும் தன் அலுவலகத்திற்கு அழைத்து, மகனின் மனப்பான்மை பற்றித்தந்தையிடம் விளக்கினார்.

கோபமுற்ற தகப்பன் தன் மகனைப்பார்த்துச் சொன்னார் ''நீ உண்மையைச் சொல். நீ கையொப்பமிட்டிருந்தால் அதனை ஏற்றுக்கொள்''

---

☐ பேராசிரியர்ஒருமாணவனிடம்: ''வேலை இல்லாத்திண்டாட்டம் தீர தீர்வுத்திட்டம் ஒன்று சொல்பார்க்கலாம்'

''எல்லா ஆண்களையும் ஒரு தீவிலும், பெண்களை இன்னொரு தீவிலும் விட்டு விட வேண்டும்''

''அங்கே அவர்கள் என்ன செய்வார்கள்?''

''தோணிகள் செய்யத் தொடங்குவார்கள்''

☐ ஒரு நத்தை தெருவைக் கடக்கும் போது ஒரு ஆமை அதன் மேல் ஏறிச்சென்று விட்டது. அவசரச் சிகிச்சை அறையில் விபத்து எப்படி நடந்தது என நத்தையிடம் கேட்கப்பட்டது அது சொன்னது...

''அது எனக்குச்சரியாக நினைவில்லை' எல்லாம் மிக விரைவாக நடந்து முடிந்து விட்டது''

---

☐ நியூமெக்சிக் கோவிற்கு சென்றிருநத ஒரு உல்லாசப் பயணி அங்கு ஒரு டைனோசர் எலும்புக் கூட்டைப்பாரத்து வியப்படைந்தவராய், வழிகாட்டியிடம் ''இந்த எலும்புக் கூடு எவ்வளவு பழைமையானது'' என்று கேடடார்.

''சரியாக 103 மில்லியன் ஆண்டுகள்'' என்றான் வழிகாட்டி, ''எப்படி அவ்வளவு நிச்சயமாகச் சொல்ல முடியும்?

வழிகாட்டி சொன்னான் —

இங்கு வந்த ஒரு புவியியலாளர் இதுநூறு மில்லியன் ஆண்டுகள் பழைமையனது என்று என்னிடம் கூறினார். அவர் கூறி மூன்று ஆண்டுகளாகின்றன.

— நன்றி ரீடர்ஸ் டைஜெஸ்ட்
**தமிழில் -எஸ். பி. கே.**

யாழ். கல்வி வலயம்
இரண்டின்

# சூழலியல் வெளிக்களச் சுற்றுலா

கோப்பாய் கணித மூல வள நிலையத்தின் முன்னால் அந்த றோசா சொகுசு பஸ் வண்டி வந்து கம்பீரமாக நிற்கின்றது.

"எல்லாரும் வந்திட்டினம் தானே... இப்பவே எட்டு மணியாச்சுது ...... இப்பிடிப் போனால் நாங்கள் திட்டமிட்டபடி எதுவும் செய்ய முடியாமற் போய்விடும்"

அங்குமிங்குமாக ஓடிக்கொண்டு எல்லா ஒழுங்குகளையும் பார்த்துக் கொண்டிருந்த விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளீஸ்வரி வேதநாயகத்தின் குரல் எல்லோரையும் உற்சாகப் படுத்திக் கொண்டிருந்தது. அவரது வார்த்தைகளைத் தொடர்ந்து ஒவ்வொருவராக பஸ் வண்டியினுள் ஏறிக் கொண்டிருந்தனர்.

"சேர்... எல்லாரும் வந்து விட்டினம். இனி எங்கடை பயணத்தைத் தொடர வேண்டியது தான்"

அவர் கூறிக் கொண்டே, வண்டியினுள் ஏறுவதற்குத் தயாராக நின்ற, பழம் பெரும் தாவரவியல் ஆசிரியரும், அதிபரும், தொண்டைமானாறு வெளிக்கள நிலைய முன்னாள் தலைவருமான திரு. எஸ். குகதாசன் அவர்களிடம் ஏற்கனவே தயாரித்து வைத்திருந்த 'அறிவியல் ஆய்வுப் பயண விபரங்கள்' கொண்ட கோவையைக் கையளிக்கின்றார்.

யாழ்ப்பாணக் கல்வி வலயம் இரண்டின் 1 ஏபி தரப் பாடசாலைகளைச் சேர்ந்த உயர் வகுப்பு உயிரியல் ஆசிரியர்கட்கான 'வெளிக்கள ஆய்வுச் சுற்றுலாவுக்கான' ஒழுங்குகளைக் கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி அவர்களின் அநுசரணையுடன், விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜனவரி மாதம் 8-ம் திகதி மேற்கொண்ட பயணத்தின் ஒழுங்குகள் யாவும் பூர்த்தியாக்கப்பட்ட நிலையில் குகதாசன் மாஸ்ரர் அந்தக் கோவையை வாங்கிப் பார்க்கின்றார்.

"வல்லைவெளி, தொண்டைமானாறு செல்வச் சந்நிதி,

மயிலியதனை, வல்வெட்டித் துறை, பருத்தித்துறை, வல்லி புரக்கோயில், மணற்காடு, நாகர்கோயில் .....''

குகதாசன் மாஸ்ரரின் கண்கள் அந்தக் கோவையில் இடம்பெற்ற பாதை விபரங்களை, மேலோட்ட மாகத் துழாவின.

யாழ்ப்பாணப் பிரதேசத்திலும், வடமராட்சி கிழக்கிலும் இயற்கை யாகவே உள்ள கடல்வாழ் அங் கிகள், கடற்கரைச் சாகியம், வரண்ட நிலத் தாவரங்கள், சதுப்புநிலத் தாவரங்கள், வட மராட்சி கிழக்கின் இயற்கைச் சர ணாலயம் என்பன தொடர்பான வாழ்க்கை முறைகளையும், சூழல் இசைவாக்க முறைகளையும் பற் றிய ஆய்வு ஒன்றினை மேற்கொள் வதற்காக, யாழ்ப்பாண வலயம் இரண்டின் பிரபல கல்லூரிகளைச் சேர்ந்த அறிவியல் ஆசிரியர்கள் அங்கே உற்சாகமாக ஒன்று சேர்ந் திருக்கின்ற அந்தக் காட்சி திரு. குகதாசனின் மனதை ஒரு கணம் நெகிழச் செய்திருக்க வேண்டும்... பஸ் வண்டியினுள் இருந்த ஒவ் வோர் ஆசிரியர்களையும் ஒரு தடவை நிறைந்த மனதுடன் பார்த்துக் கொண்டார்.

உரும்பிராய் இந்துக் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல் லூரி, புனித ஹென்றி அரசர் கல் லூரி, சிதம்பராக் கல்லூரி, ஹாட் லிக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ் தவக் கல்லூரி, சோமஸ்கந்தாக் கல்லூரி,வசாவிளான் மத்தியமகா வித்தியாலயம், நெல்லியடி மத் திய மகாவித்தியாலயம், மானிப் பாய் இந்துக்கல்லூரி, விக்ரோறி யாக் கல்லூரி, இடைக்காடு மகா வித்தியாலயம். வட இந்து மகளிர் கல்லூரி, ஆகிய 14 பிரபல கல் லூரிகளைச் சேர்ந்த துடிப்பும், ஆர்வமும் இளந்தலைமுறை யினரைப் பார்த்து தனக்குள் பெருமைப்பட்டுக் கொண்டார்.

ஓ.... எங்களுடைய யாழ்ப்பா ணக் கல்விச் சமூகத்தின் எதிர் காலச் சிற்பிகளையும்,அறிவுழைப் பாளிகளையும் உருவாக்கும் ஆசி ரியப் பெருமக்களைத் தாங்கிய படி அந்தப் பஸ் வண்டி வல்லை வீதி வழியாக தொண்டைமா னாறு நோக்கி விரைந்து கொண் டிருந்தது.

சூழலியல் வெளிக்கள ஆய்வுப் பயணத்தைத் தொடங்கு முன் சந்நிதி முருகனின் தரிசனத்தைத் தொடர்ந்து, சந்நிதியான் ஆச் சிரம நிர்வாகி திரு.செ.மோகன தாஸ் அவர்களின் தேநீர், சிறிது களைப்புற்ற அந்த ஆய்வாளர்க ளுக்குத் தென்பைக்கொடுத்திருக்க வேண்டும். அவரிடம் நன்றிகூறிக் கொண்டே, பஸ் வண்டியில் ஓடிச்

சென்று ஏறியதும் அங்கிருந்து வல்வெட்டித்துறை நோக்கி அந்த வண்டி கடற்கரை வீதி வழியாக விரைந்து கொண்டிருந்தது.

பஸ் வண்டியின் முன் ஆசனத்தில் இருந்து வழி காட்டிக் கொண்டிருந்த திரு. குகதாசனின் கண்கள் கடற்கரைப் பக்கமாக உள்ள இயற்கைஅழகைஇரசித்துநோட்டமிட்டபடியே இருந்தன.

''தம்பி...இதிலை ஒரு பக்கமாக பஸ் வண்டியை நிற்பாட்டுங்கோ...'' என்று, அவர் கூறியதும், வல்வெட்டித்துறை மயிலியதனை மயானத்தின் முன் அந்த பஸ் வண்டி ஒரு குலுக்கலுடன் நின்றதும், அதில் இருந்து முதலில் திரு. குகதாசன் மாஸ்ரர் இறங்க, அவரைத் தொடர்ந்து, விஞ்ஞான உதவிக் கல்விப்பணிப்பாளரும், ஏனைய ஆசிரியர்களும் ஒவ்வொருவராக இறங்கினர்.

''இங்கையிருந்து கடற்கரை வரையும் போய்ப்பார்த்தால் மூன்று விதமான சூழற் சாகியங்களை நீங்கள் பார்க்கலாம்.... வரண்ட நிலத் தாவரச்சூழல், கடற்கரைச்சூழல்... கடற சாகியச் சூழல்... என்று பல்வேறு அங்கிகளை நீங்கள் அவதானிக்கலாம்....'' திரு. குகதாசன் இப்படிக் கூறியதும், அங்கே நின்ற ஆசிரியர்கட்கு ஒரே குதூகலம். புத்தகங்களிலும் கோட்டுப் படங்களிலுமே பெருமளவுக்குப் பார்த்துப் பழகிய ஆசிரியர்கட்கு, அவற்றுள் பலவற்றை நேரிற் பார்த்துச் சேகரிக்கப் போகின்றோமே என்ற ஆவல், அவர்களது முகங்களில் தொனித்தது. ஒவ்வொருவரும் தாம் கொண்டு வந்த போத்தல்கள், பொலித்தீன் பைகள் ஆகியவற்றைத் தயாராக எடுத்து வைத்தனர்.

''இது லிங்கா றோசியா... தமிழீழத்தின் விலை மதிப்பற்ற ஏற்றுமதிக்குரிய ஒரு மூலிகைச் செடி.... இதன் அருமையை நாங்கள் இன்னும் உணரவில்லை...'' திரு. குகதாசன், அங்கே பாதை ஓரத்தில் பூத்துக் குலுங்கியிருந்தஅந்தவெள்ளைப் பட்டிப்பூத்தாவரத்தை வேருடன் பிடுங்கி, அதன் உருவவியல் அமைப்பையும், பொருளாதார முக்கியத்துவத்தையும் விளக்கிக் கூறிக் கொண்டிருந்தார். அதனைத் தொடர்ந்து ஆங்காங்கே காணப்பட்ட வரண்ட நிலத் தாவரங்களையும் காட்டி, அவற்றின் தாவரவியற் பெயர்களையும், பொருளாதார முக்கியத்துவத்தையும் படபட என்று கூறிக் கொண்டே சென்றார். அவருடைய அநுபவ முதிர்ச்சிக்கும் வேகத்திற்கும் ஏற்ப அந்த இளம் ஆசிரியைகளினால் ஈடு கொடுக்க முடியவில்லையோ என்னவோ ஆளை ஆள் பார்த்துக் கண்களாற் கதைத்துக் கொண்டிருந்தனர்.

அங்கிருந்து, மயானத்தையும் தாண்டிக் கடற்கரைக்குக் கூட்டிச் சென்று, முருகைக் கல், கடல் அணிமணி, முனிவர் நண்டு, கபில அல்கா, கடல் அட்டை என்று பல்வேறு அங்கிகளை எடுத்துக் காட்டி விளக்கம் கொடுத்துக் கொண்டே சென்றார். அங்கே நின்ற ஆசிரியர்கள் உற்சாகத்துடன் தமது வெளிக்களக் கொப்பிகளிற் குறிப்புக்களை எடுத்துக் கொண்டிருக்க, சில ஆசிரியர்கள் ஓடி ஓடி அவற்றைப் போத்தல்களில் சேகரித்துக் கொண்டிருந்தனர். இந்தக் காட்சிகளை எல்லாம் இடையிடையே சியாமளா தனது கமராவிற்குள் அடக்கவும் தவறவில்லை.

''சரி...... இங்கை இவ்வளவும் காணும், அடுத்தது வல்லிபுரக் கோயிற் சூழல்...'' அவர் எல்லோரையும் துரிதப்படுத்தி வண்டியில் ஏற்றி, தானும் ஏறிக் கொண்டார். வல்லிபுரக் கோயில் நெருங்கியதும், அதற்கு 100 யார் தூரத்தின் முன்னால் பஸ் வண்டியை நிறுத்துமாறு கூறி விட்டு குக தாசன் மாஸ்ரர் இறங்கி நடந்தார்.

> "இந்தத் தரவைக் குளத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதியிலும் நிறைய நன்னீர்ச் சூழற் சாகியத்தைக் காணலாம். இங்கனேக்கை நிறைய துரொசீராத் தாவரங்கள் இருக்கு... ''

'துரொசீரா' தாவரம் என்பது ஊனுண்ணித் தாவர வகையைச் சேர்ந்தது. சிறிது தட்டையாக மெல்லிய சிவப்பு நிறத்தில் இருக்கும். அதில் உணர் கொம்புகள் காணப்படும். அவற்றில் சூரியஒளி பட்டு, பன்னிறங்களைத் தெறிக்கச் செய்வதால், அழகிய பூக்கள் போன்று காணப்படும். அவற்றைப் பூக்கள் என்று மயங்கி வரும் சிறிய பூச்சிகளை அப்படியே லபக்கென்று சுருட்டிப் பிடித்துச்சாற்றை உறிஞ்சிவிடும்...

தரையைக் குனிந்து பார்த்தபடியே சென்று கொண்டிருந்த குகதாசன் மாஸ்ரரைத் தொடர்ந்து பாலா, குணசீலன், சர்மா, தேவகி, சந்திரிகா, சியாமளா... இப்படி ஒவ்வோர் ஆசிரியர்களாகத் தரையைக் குனிந்து பார்த்தபடியே 'துரொசீரா'வைத் தேடிக் கொண்டிருந்தனர்.

> ''ஆ...... எல்லாரும் இங்கை பாருங்கோ...... இது தான் துரொசீரா .. என்ற தாவரவியற் பெயர்...''

அவர் காட்டிய அந்தச் சின்னஞ் சிறிய தாவரத்தை மண்ணுடன் பிடுங்கி எடுத்த பாலாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''இவ்வளவு சின்னதாக இருக்குமென்று நான் எதிர்பார்க்கேல்லை...... ''பாலா அதைத் தூக்கி எல்லோருக்கும் காட்டி

(மிகுதி அடுத்த இதழில் தொடரும்)

# பகலவன் பதில்கள்

ந. பிரதீபன்
மல்லாகம்.

❀ இலட்சியத்திற்காக உயிரையே அர்ப்பணிக்கின்ற இளைஞர்கள் வாழும் மண்ணில் அநாவசியமாக வீதியில் திரிவதும், பெண்கள் மீது சேட்டைகள் புரிவதும், 'றாக்கிங்' போன்ற துன்புறுத்தல்களிற் சுகம் காண்பதுமான செய்கைகளில் ஈடுபடும் இளைஞர்களும் இருக்கின்றனரே! இந்தமுரண்பாடு ஏன்?

☐ விருட்சங்கள் வளரும் மண்ணில்தான் விஷப் பூண்டுகளும் முளைக்கின்றன. இந்த விஷப் பூண்டுகளின் வளர்ச்சி கூடுமென்றால், அவற்றை முளையிலேயே கிள்ளி வைக்கத்தான் வேண்டும்.

எஸ். இராமஜெயம்
வல்வெட்டித்துறை.

❀ போரினால் யாருக்கு இலாபம்?

☐ சிறிலங்காவின் படை அதிகாரிகளுக்கும், நமது பதுக்கல் வியாபாரிகளுக்கும்.

ம. சதாசிவம்
ஆவரங்கால்

❀ நிலாவில் தங்கம் இருப்பதாகக் கூறப்படுவது உண்மையா?

☐ உண்மை என்று இப்போது விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். நமது தமிழ்க் கவிஞர் தாங்கள் முன்னரே கூறிவிட்டதாக, சில சமயம் உரிமை கோரலாம்; 'தங்க நிலாவே' என்று அவர்கள் பாடி இருப்பதால்!

வை. தேவராசன்
நாயன்மார்க்கட்டு

❀ கவிஞர் பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம் சமூகச் சீர்திருத்தப் பாடல்கள் மட்டும் தான் எழுதியுள்ளாரா?

☐ காதற் பாடல்களும் எழுதியுள்ளாரே!

'என்னருமைக் காதலிக்கு
வெண்ணிலாவே! – நீ
இளையவளா மூத்தவளா
வெண்ணிலாவே...'

முு. தயாபரன்
கைதடி

❀ சமாதானச் செயற்பாடுகளைக் குழப்ப எத்தனிப்பது இராணுவமா? சிங்கள மக்களா?

☐ சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் மனமாற்றங்கள் ஏற்பட்டிருப்பதை இன்று அவதானிக்க முடிகிறது. சமாதானத்தை முன் வைத்துத்தான், புதிய அரசு சிங்கள மக்களின் ஆதரவைப் பெற்று அரசமைத்துள்ளது. கடந்த கால அனுபவங்களினூடாகவே சாதாரண சிங்கள மக்கள் இம்மாற்றத்தினைப் பெற்றிருக்கலாம்.

இன்று முட்டுக்கட்டையாக இருப்பது இராணுவமும் இராணுவ மேலாதிக்கத்திற்கு அனுசரணையாக இயங்கும் அரசாங்கமுமே. 'ஐயோ போர் வேண்டாம்' என்று கூறும் கட்டம், இராணுவத்திற்கும் வேறு அனுபவங்களினூடாக ஏற்பட்டாலும் ஏற்படலாம்.

றேணுகா நாகலிங்கம்
தொண்டமானாறு.

❀ ஆசிரியத் தொழில் என்றதுமே சிலருக்கு வாழ்க்கையை வெறுக்கின்றதாமே! இது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

☐ என்ன? வாழ்விற்கு வழி காட்டுகின்ற புனிதமான ஆசிரியத் தொழிலில் வெறுப்பு வருகின்றதா? என்னால் அபிப்பிராயம் சொல்ல முடியவில்லை.

இராதாகிருஷ்ணன் ஆரணி
உடுப்பிட்டி.

❀ மாணவரை நல்வழிப்படுத்துவது சமுதாயமா? கல்வியா?

☐ கல்விதான் சமுதாயத்தை நல்வழிப்படுத்துவது. கற்ற சமுதாயமே மாணவரை நல்வழிப்படுத்த முடியும். உங்கள் கேள்விக்குப் பதில் 'இரண்டும்' என்பது தான். கல்வி என்பது வெறும் ஏட்டுச் சுரைக்காயாக மட்டும் அல்லாமற் பார்த்துக் கொள்ள வேண்டியதும் அவசியம்.

---

☐ *நீதிபதிக்கு நான்கு வகைக் குணங்கள் தேவை. பொறுமையுடன் செவிசாய்ப்பது, புத்திசாலித்தனமாகப் பதில் சொல்வது தீர்க்கமாக ஆலோசனை செய்வது; பாரபட்சமற்ற தீர்ப்பளிப்பது.*

**சோக்றட்டீஸ்**

# இறக்கை இல்லாத பறவைகள்

உங்களுக்குச் சுமை இருக்கிறதா?
அப்படியானால், ஜெர்மன் நூலாசிரியர் ஷில்லர் குழந்தைகளுக்குச் சொல்லியுள்ள அழகான, உற்சாகமூட்டும் கதையை நினைவு படுத்திக் கொள்ளுங்கள்.

ஒரு காலத்தில் பறவைகளுக்கு இறக்கைகள் இல்லாமல் இருந்தது. பூமியின் மீது அவை ஊர்ந்து கொண்டிருந்தன. ஒரு நாள் கடவுள் இறக்கைகளை அவற்றிடம் வீசி, அவற்றை எடுத்து முதுகிற் சுமக்கும்படி சொன்னார்.

முதலில், பறவைகளுக்கு அது கடினமாக இருந்தது. சிறிய பறவைகள் கடினமான அந்தப் பெரிய இறக்கைகளைச் சுமக்க விரும்பவில்லை. ஆனால், கடவுளை அவை நேசித்தன. ஆகவே அவர் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து, இறக்கைகளைத் தங்கள் முதுகிற் சுமக்க ஆரம்பித்தன. இறக்கைகள் பறவைகளின் முதுகில் ஒட்டிக் கொண்டன. ஒரு காலத்தில் அழுத்துகின்ற பாரம் எனத் தோன்றிய அந்த இறக்கைகள், அவை பறப்பதற்கு உதவியாயிற்று.

வாழ்க்கையின் மிகப் பெரிய பாடம் இது. நாம் சுமக்கின்ற பாரங்களே, அவசியத்தினாலோ அல்லது நாம் விரும்புவதாலோ நம்மைக் கீழே இழுப்பதற்குப் பதிலாக, மேலே உயரச் செய்து விடுகின்றன.

வாழ்க்கைச் சுமைகளில் இருந்து நாம் தப்பிக்க முடியாது. உண்மையில், வாழ்க்கையின் ஒருபகுதி அவை. நமக்கு அளிக்கப்பட்டுள்ள குறுகலான வாழ்க்கையில், சுமைகள் பற்றி நாம் கொள்ளுகின்ற நோக்குத்தான், நம்முடைய மகிழ்ச்சிக்குக் காரணமாகின்றது.

வரலாற்றில் எத்தனையோ பேர் அடிமைகளாகவே வாழ்ந்து, தங்களுடைய சக்திக்கும் அதிகமான பாரங்களைச் சுமந்து இருக்கிறார்கள். அவர்களது வாழ்க்கை நமக்கு ஒருபடிப்பினை.

பாய்மரக்கப்பல்கள் இல்லாத காலத்தில், பழங்காலக் கப்பல்களைத் துடுப்புக்கள் மூலம் வலித்த தசைப்பலத்தை நினைத்துப்

# "சாளரம்" நான்காம் ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்படும்

# பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள்

மாணவர்களின் ஆக்கத்திறனை ஊக்குவிக்குமுகமாக நடத்தப்படும் இப்போட்டிகளில் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் பங்கு பற்றலாம். இப் போட்டிகள் பின்வரும் மூன்று பிரிவுகளாக நடத்தப்படும்.

| | |
|---|---|
| பிரிவு 1 | ஆண்டு 6, 7, 8 |
| பிரிவு 2 | ஆண்டு 9, 10, 11 |
| பிரிவு 3 | ஆண்டு 12, 13 |

போட்டியில் பங்குபற்றுவதற்கான விதிமுறைகள்:

01. அரசாங்க / தனியார் பாடசாலைகளில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்கள் இப்போட்டிகளில் பங்குபற்றலாம்.

02. இப் போட்டிகள் பாடசாலைகள் மட்டத்தில் நடைபெற்று, அதில் முதல் மூன்று இடங்கள் பெறும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, கோட்டமட்டப் போட்டிக்குத் தெரிவுசெய்யப் படுவர்.

03. (அ) பாடசாலை மட்டத்தில் நடைபெற்று முடிக்கவேண்டிய இறுதித் திகதி 30.05.95 ஆகும்.

(ஆ) கோட்டமட்டத்தில் நடைபெற்று முடிக்கவேண்டிய இறுதித் திகதி 05.06.95 ஆகும்.

கோட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப்பெறும் மாணவர்களின் பெயர்களை அனுப்பி வைக்க வேண்டிய இறுதித் திகதி [illegible] .95 ஆகும். வெற்றியாளர்களுக்கான பரிசுகளும், சான்றிதழ்களும் ''சாளரம்'' 4ம்ஆண்டு நிறைவு விழா வில் வழங்கப்படும்.

*தெரிவுசெய்யப்பட்ட ஆக்கங்களை அனுப்பவேண்டிய முகவரி:*

மாணவர்கட்கான போட்டிகள்,
சாளரம்,
வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

கட்டுரைப் போட்டி:

01. கட்டுரை ஃபுல்ஸ்கேப் தாளில் 05 பக்கங்களுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

02. கட்டுரைகள்;- பாடசாலையில் ஆசிரியர்கள் முன்னிலையில் நடத்தி முதல் மூன்று இடங்கள் பெறும் மாணவர்களின் பெயர்கள், எழுதப்பட்ட கட்டுரைகள் என்பவற்றைக் கோட்டத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

03. தாளின் ஒருபக்கத்தில் மட்டும் எழுதுதல் வேண்டும்.

04. போட்டியாளரின் சொந்தப் பெயர், முகவரி என்பன வேறாக ஒரு தாளில் எழுதி இணைத்தல் வேண்டும்.

05. கட்டுரைக்கான தலைப்புக்கள்: பின்வரும் தலைப்புக்களில் மேற்பார்வையாளரினால் தெரிவு செய்யப்படும் ஒன்றைப்பற்றி ஒவ்வொரு பிரிவு மாணவரும் போட்டித் தினத்தன்று எழுதுதல் வேண்டும்.

பிரிவு I க்கான தலைப்புக்கள்

1. எனது இலட்சியமும் எனது சமுகமும்
2. நாமிருக்கும் [illegible]

அன்பளிப்பு :- கோ உதயராஜ்

பிரிவு II க்கான தலைப்புக்கள்

1. நமது மொழி தமிழ் நமது நாடு தமிழீழம்

2. பொது அறிவின் அவசியம்

3. தமிழீழ விடுதலைப் போராட்டமும் கரும்புலிகளும்

பிரிவு III க்கான தலைப்புக்கள்

1. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பரிணாம வளர்ச்சி

2. உலக விடுதலைப் போராட்டங்களில் மாணவர் பங்கு

3. மொழியும், நாடும் இரு கண்கள்

4. தமிழீழவிடுதலைப் போராட்டமும் பெண்களின் பங்களிப்பும்

ஓவியப் போட்டி;

01. 24 செ . மீ × 30 செ . மீ அளவுக்குக் குறையாததாகச் சித்திரம் அமைதல் வேண்டும்.

02. சம காலத்தைப் பிரதிபலிக்கும் ஓவியங்களாக இருத்தல்வேண்டும். நேரம் 2 மணித்தியாலம்

03. விரும்பிய வர்ண ஊடகம் உபயோகிக்கப்படலாம்.

04. சித்திரத்தின் பின்புறத்தில் போட்டியாளரின் பெயர், ஆண்டு, பாடசாலைப் பெயர் குறிக்கப்படல் வேண்டும்.

05. மாணவர்கள் சுயமாக வரைந்த ஓவியங்கள், படசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டு 30. 05. 95 க்கு முன்னர் கோட்டப்பிரதிக்கல்விப்பணிப்பாளர்களிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

மாணவர்கட்கான வினாடி வினாப் போட்டிகள்;

01. ஒவ்வொரு பாடசாலையும் ஐந்து மாணவர்களை இப்போட்டிக்கு அனுப்புதல் வேண்டும். இதுதிறந்த போட்டியாக அமையும்.

02. கோட்ட மட்டங்களில் இப்போட்டி பார்வையாளர் முன்னிலையில் நடாத்தப்படும்.

03. போட்டியில் பங்குபற்றி வெற்றி பெறும் பாடசாலைக்கும், அவ்வணியில் பங்குபற்றிய மாணவர்கட்கும் தனித்தனியான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும். மிகக் கூடுதலான புள்ளிகள் பெறும் மாணவர்கட்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும்.

04. வினாடி வினாப் போட்டியில் சமூகவியல், மொழியியல், அறிவியல், தொழில்நுட்பம், அரசியல்தொடர்பான வினாக்கள். இடம்பெறும்.

05. வினாடி வினாப்போட்டிக்கான விண்ணப்பங்களை 15-05-95க்கு முன்னர் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர்களிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

திறந்த போட்டிகள் — கவிதையாக்கம்;

01. இப்போட்டியில் மாணவர் மட்டுமல்லாது வயதுக் கட்டுப்பாடின்றி எவரும் பங்குபற்றலாம்.

02. கவிதைகள் 40 வரிகளுக்கு மேற்படாது] இருத்தல் வேண்டும்.

03. சமகாலப்பிரச்சினைகளைப் பிரதிபலிக்கின்ற விடயங்களை உள்ளடக்கியதாகக் கவிதையின் உள்ளடக்கம் இருத்தல்வேண்டும்.

மேற்படி போட்டிகள் சிறப்புற நடைபெற மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர், ஆர்வலர்கள், வாசகர்கள் அனைவரையும்ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

— சாளரம் —

பார்க்கலாம். அமெரிக்க நீக்ரோக்கள் பெரிய ஆறுகளில் படகுகளை இழுத்துச் சென்ற காட்சியும், முதுகு ஒடிய மூட்டைகளைச் சுமந்த காட்சியும் நினைவிற்கு வரும்.

சுமக்க முடியாத பாரங்களைச் சுமக்க நேர்ந்தபோது, அவர்கள் என்ன செய்தார்கள்?

பாட்டுப் பாடினார்கள்.

அவர்கள் தங்களுக்கு ஏற்பட்டதை அப்படியே ஏற்றுக் கொண்டார்கள். வாழ்க்கை எந்தச் சுமையை உங்கள் மீது சுமத்தினாலும் அதை ஏற்றுக்கொள்ளுங்கள்; பாடுங்கள்.


இது ஒரு மனோதத்துவ உண்மை. மனோதத்துவ நிபுணர்கள் தோன்றுவதற்கு முன்பே, பழங்கால மக்களுக்குத் தெரிந்திருந்த உண்மை. முன்னேறிச் செல்லும் நோக்கத்தோடு, உங்கள் சுமைகளை ஏற்றுக்கொண்டு, வாயிலே பாட்டை முணுமுணுக்காவிட்டாலும், இதயத்தில் முணுமுணுத்தால், இயற்கை நிகழ்த்துகின்ற அற்புதத்தால் உங்கள் சுமை லேசாகி விடுகிறது.

பறவைகள், பாரம் என்றெண்ணி முதுகிற் சுமந்த இறக்கைகள் முதுகிலேயே ஒட்டிக் கொண்டு, அவை பறப்பதற்கு உதவியதைப் போல, வாழ்க்கையில் உங்களுக்குத் தரப்பட்ட சுமைகளும் உங்களை உயர்த்துவதற்காகவே அமைந்ததாக எண்ணுங்கள்.

ஷில்லர் சொன்னது வெறும் கற்பனைக் கதைதானா?

அல்லது வாழ்க்கையின் முரண்பாட்டிலே தான் அதற்கான வெகுமதியும் இருக்கின்றதா?

நீங்கள்முயற்சி செய்கின்ற வரையில் அது உங்களுக்குத் தெரியப் போவதில்லை.




எம். ஆர். கோப்மேயர்

நீங்காத நினைவுகள்

# இறை தூதன் போல் வந்த மில்லர்

**1987**ம் ஆண்டு காலப் பகுதி. அப்போது நான் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைக் கற்றுக்கொண்டிருந்தேன்.

திடீரென ஒருநாள் காலைக் கடன்களை முடித்து பாடசாலை செல்வதற்கு ஆயத்தமான போது இருந்தாற்போல் எமது ஊர் ஆரவாரப்படத் தொடங்கியது நானும் உறவினர்களும் வெளியே வந்து ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தபோது வித விதமான பல வானூர்திகள் எமது கிராமத்தை வட்டமிட்டு, சரமாரியான குண்டுத் தாக்குதலை நடத்திய வண்ணமிருந்தன.

சில மணித்தியாலங்களில் தாக்குதல் உச்சக்கட்டத்தை அடைந்தது. சில உலங்கு வானூர்திகள் தாழப் பறந்து வட்டமிட்டு, கண்ணிமைக்கும் நேரத்தில் தமது துருப்புக்களையும் ஆயுதங்களையும் சில மைல் தொலைவிலுள்ள ஆலயமொன்றில் தரையிறக்கிவிட்டுஉயரப் பறந்து சென்றன.

நேரம் பகற்பொழுதாகிக் கொண்டிருந்தது. ஹெலிகள் பல தடவைகள் தரைஇறங்கிஎழும்பிச் சென்றன. விமானத் தாக்குதலோ அகோரமாக இருந்தது, பல பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களிலிருந்தும், கடலில் இருந்தும் சரமாரியான எறிகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுக்கொண்டிருந்தன. இருந்தும், தரையில் மண்ணின் மைந்தர்களுக்கும் சிங்களக் கூலிப் படைக்குமிடையில் உக்கிரமாகச் சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்தது.

வான், கடல் தாக்குதல்களின் உதவியுடன் சிங்களப்படை முன்னேறிக் கொண்டிருந்தது. சிலமணி நேரத்தில் எமது கிராமமே கூலிப் படையினரின் துப்பாக்கி வேட்டுக்களால் அதிர்ந்தது. நாம் ஓடவும் வழியின்றி இராணுவத்தின்

## அரும்புகள்

மாணவர் ஆக்கம்

கோரப் பிடிக்குள் சிக்கிக்கொண்டிருந்தோம். எல்லாமே, காலை விடிந்து சிலமணிநேரத்துக்குள் நடந்து முடிந்துவிட்டது.

இப்போது எமது வடமராட்சிப் பிரதேசம் முழுவதும் சிங்களப் படையினரின் கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்பட்டிருந்தது. எனது பாடசாலையிலும் பெரியதொரு படைமுகாம் அமைக்கப் பட்டது. எமது ஊர் அவ்வப்போது முற்றுகையிடப்பட்டு, அரச படையினரின் வெறியாட்டத்துக்கு ஆளாகும். பல அப்பாவி மக்கள் ஈன இரக்கமின்றிக்கொன்று குவிகப்பட்டனர். பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டு, கொடிய பூசா வதைமுகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

நாம், பாடசாலை, கல்வி எல்லாவற்றையும் இழந்து செய்வதறியாது திகைத்திருந்தோம். எமதுவீட்டிற்கருகில் ஒருபோராளியின்வீடு இருந்ததால் அதைச்சாட்டாகவைத்து எமது வீடும் அடிக்கடி சிங்களப்படையால் முற்றுகையிடப்பட்டுச் சல்லடையிடப்பட்டது. எனது பெற்றோரும் முகாம்களுக்குக் கூட்டிச்செல்லப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர்.

நாட்கள் நகர்ந்தன. எமக்கு விடிவே கிடையாதா என ஏங்கியபடி, தினமும் இறைவனையே இரந்தவாறு எமது காலம் நகர்ந்தபடிஇருந்தது' ' கடவுளும் என்னத்தைச்செய்வார்? அவருக்குக் கண் கடை ஏதும் இருந்தால்தானே' ' என்று எமது மக்கள் இறைவன் மீது கூட வெறுப்பைக்கொட்டுமளவிற்குச் சிங்களப்படையின் வெறியாட்டம் அகோரமாக இருந்தது.

இருந்தாற் போல் ஒருநாள் மாலைப் பொழுது திடீரென பல திசைகளிலிருந்தும் வெடிச்சத்தங்கள் சடுதியாகக்கேட்டன. கூடவே வான் அதிரும்படியாக, வர்ணிக்க முடியாத ஒரு பேரோசை எமது பாடசாலைப் பகுதியில் கேட்டு ஓய்ந்தது.

எமது ஊர்நாய்கள் ஓய்வின்றிக் குரைத்த வண்ணமிருந்தன. ஆம்...! எம்மைக் கெடுமைப் படுத்திய சிங்களக்கூலிப்பட்டாளம் சீருடைகளோ ,ஆயுதங்களோ எதுவுமேயின்றி அடைக்கலந்தேடி அருகிலிருக்கும் வீடுகளை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது. எனினும் நடந்ததோ, நடக்கப்போவதோ எதுவுமே தெரியாதவர்களாய் நாம் ஏக்கத்தோடு இருந்தோம். ஆனாலும் எமது மனங்களில் விடிவின் அறிகுறி ஒன்று தோன்றியது.

ஆம்...! மறுநாட்காலை அந்தச் செய்தி எம்காதுகளில் எதிரொ

லித்தது. மகிழ்ச்சியிலும் ஒரு சோகம். எம்மால் நம்பவே முடிய வில்லை. எமது ஊரில் எம்மோடு வாழ்ந்துவிட்டு நாடுகாக்கச் சென்ற ஒரு விடுதலை வீரன் ஓர் ஒப்பற்ற வீரதீரக் காவியம் படைத்து விட்டான் ......எமது ஊரே சோகத்திலாழ்ந்தது. எனி னும் எம்துயர் அறிந்து இறை வன் அனுப்பிவைத்த அந்த இறைதூதன் ''மில்லர்' மக்கள் மனங்களில் புனிதமான கோவி லாகக் கட்டப்பட்டு நிலைத்து விட்டான்... இப்போது அவனது உடலோடு மூச்சும் கலந்து விட்ட அந்த இனிமையான தென்றல் தொட்டுத் தழுவிச் சுகமளித்தபடி யிருக்க; போகின்றோம்... படிப் பதற்கு... நெல்லியடி மில்லர் மகாவித்தியாலயத்திற்கு; நடந்து முடிந்து விட்ட அந்த நீங்காத நினைவுகளுடன்.

அ. சண்முகதாஸ்.
ஆண்டு-12, யா/ கொக்குவில்
இந்துக்கல்லூரி.

---

*மாணவர்களே நீங்களும் உங்கள் வாழ்வில் இடம் பெற்ற மறக்கமுடி யாத சம்பவத்தைச் சுருக்கமாக எழுதி அனுப்பலாம். தரமானவை பிரசு ராகும்.*

---

**94 ம் ஆண்டுக்கான உலகக்கோப்பை காற்பந்தாட்டப் போட்டி அமெரிக்காவில் 09 இடங்களில் நடைபெற்றது. அந்த 09 இடங்களும் வருமாறு:-**

| விளையாட்டு மைதானம் | அமைந்துள்ள இடம் | மக்கட் கொள்ளளவு |
|---|---|---|
| றொபேர்ட் எஃப். கெனடி விளையாட்டரங்கம் | வோஷிங்ரன் டீ.சி | 55 671 |
| ஃபுளோறிடா சிற்றஸ் பவுல் | ஃபுளோறிடா | 52 300 |
| ரெக்சாஸ் விளையாட்டரங்கம் | ரெக்சாஸ் | 65 024 |
| றோஸ் பவுல் | கலிபோர்னியா | 104 091 |
| ஸ்ராண்ட் போர்ட் விளையாட்டரங்கம் | கலிபோர்னியா | 86 019 |
| சோல்ஜர் பீல்ட் | இலினொய்ஸ் | 66 9-9 |
| சில்வர் டோம் | மிச்சிக்கன் | 80 500 |
| சுலிவன் விளையாட்டரங்கம் | மசாசுசெற்ஸ் | 60 749 |
| ஜயன்ட்ஸ் விளையாட்டரங்கம் | நியூஜெர்சி | 76 891 |

தொகுப்பு:- கெ. இந்திரமோகன்,
யா/யூனியன் கல்லூரி.

# தெரிந்து கொள்ளுங்கள்

* தென்துருவத்தை முதன்முதலில் 1911 இல் நோர்வே நாட்டைச் சேர்ந்த ரோல்ட் அமண்ட்சன் என்பவர் அடைந்தார். இதன்பின்னர், 1929 இல் றிச்சேட் இ. பேர்ட் எனும் அமெரிக்கர் விமானம் மூலம் தென் துருவத்தைக்கடந்தார்.

* உலகிலேயே தேயிலைத்தூள் ஏலம் விடுவதில் முதலிடம் வகிப்பது, இலங்கையின் கொழும்பு நகரம்தான்.

* உலகிலேயே அதிகளவு கைக்கடிகாரங்களை ஏற்றுமதி செய்யும் நாடு ஹொங்கொங் ஆகும். ஆனால் விலை மதிப்புள்ள கடிகாரங்களைத் தயாரிப்பதில் ஹொங்கொங் மூன்றாமிடத்தில் நிற்கிறது.

* 1642 இல் டாஸ் மேனியாவையும், நியூசிலாந்தையும் ஏபெல் டாஸ்மேன் கண்டுபிடித்தார்.

* சர்வதேசக் காற்பந்துச்சங்கம் 1904ல் தொடங்கப்பட்டது ஆனால் 1930ஆம் ஆண்டு தொடக்கமே உலகக்கோப்பைப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

* உலகின் முதலாவது மோட்டார்க் கார்ப்பந்தயம் 1894 ல் பிரான்சில் நடைபெற்றது.

* உலகிலேயே அதிகளவு நாளிதழ்கள் வெளிவரும் நாடு அமெரிக்காவாகும். இங்கு 1700 நாளிதழ்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

* முதல் விமானம் றைட் சகோதரர்களினால் அமைக்கப்பட்டது. இவ்விமானம் 1903 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ம் திகதி விண்ணிற் பறந்தது. இதன் பெயர் கிளைடர் -1 ஆகும்.

* உலகிலேயே மிகப் பெரிய பிரமிட் மெக்சிக்கோவிலுள்ள யுகாடன் எனுமிடத்திலுள்ள குயிட்ஷால்கோட் எனும் பிரமிட்டாகும். 45 ஏக்கர் நிலப்பரப்பிற் கட்டப்பட்ட இந்த பிரமிட்டின் உயரம் 177 அடிகளாகும். ஆனால் உலகிலேயே மிக உயரமான பிரமிட் எகிப்து நாட்டிலுள்ள 'சியோப்ஸ்' எனும் பிரமிட்டாகும். இதன் உயரம் 480 அடிகள்.

* வளர்ச்சியடைந்த ஒரு மனிதனது தோலின் பரப்பு 18 சதுர அடிகள் ஆகும்.

* உலகிலேயே அதிகளவில் காணப்படும் பறவை 'ரெட்பில்ட்கியூலியா, எனும் பறவையாகும். இது ஆபிரிக்கக் காடுகளில் அதிகளவிற் காணப்படுகிறது. இதன் மொத்த எண்ணிக்கை ஆயிரம் கோடிக்கு மேல் என மதிப்பிடப்பட்டுள்ளது.

* விசேட கணனி ஒன்று ஒரு வினாடியில் 80 கோடி கணக்குகளைப் போட்டுவிடும்.

**தொகுப்பு: — ப. ரகுராம்**
**ஆண்டு 12, வல்வை சிதம்பராக்கல்லூரி.**

---

## உலக விடுதலை அமைப்புக்கள்

* குர்திஷ் மக்களின் விடுதலை அமைப்பு – P. K. K
* பெருநாட்டு விடுதலை அமைப்பு –
  ஒளிரும்பாதை (Shining Path) இயக்கம்
* கிழக்குத் திமோர் மக்களின் விடுதலை அமைப்பு -
  பிரெட்லின் இயக்கம்
* மெக்சிக்கோ செவ்விந்தியரின் விடுதலை அமைப்பு –
  சபடிஸ்ரா இயக்கம்
* அஸாம் மக்களின் விடுதலை அமைப்பு –
  உல்பா இயக்கம்
* பர்மியப் போராளிகள் அமைப்பு –
  கரென் போராளியமைப்பு
* கம்போடியாவில் போரிடும் இயக்கம் –
  கமரூச் இயக்கம்
* அங்கோலாவில் போரிடும் இயக்கம் –
  யுனிற்றா (Unita) இயக்கம்
* வட அயர்லாந்து விடுதலை இயக்கம் –
  அயர்லாந்துக் குடியரசுப்படை I. R. A
* ஆப்கான் மாணவர் அமைப்பு –
  தலிபான் இயக்கம்
* பிலிப்பைன்ஸ் இஸ்லாமியப் போராளியமைப்பு –
  அபுசாயப் இயக்கம்
* பலஸ்தீன இஸ்லாமிய அடிப்படைவாத இயக்கங்கள் –
  ஹமாஸ் ஜிகாத் இயக்கங்கள்

தொகுப்பு:– கெ. இந்திரமோகன்
யாழ்/ யூனியன் கல்லூரி.

# தியாகச்சுடர் அன்னை பூபதி

தீயவர்கள் தீயானபோது
தியாகச் சுடரான பூபதியே!
உன் ஒளி மங்க
தியாகச் சுடராகி வரலாற்று ஏட்டினிலே பதிந்தாயம்மா
உன் ஒளிப்பிழம்பு மங்கி மறையும் முன்
உன்பாதந்தொட்டு வேங்கைகள் புயலாகிப் பொங்கி எழுந்தனர்
பொங்கு தமிழ் காக்கப் புறப்பட்ட வேங்கைகளின் பூவாக நீ நின்றதால்,
பதியாகி உயர்ந்திட்டாயம்மா.


ச. ஸ்ரீபிரியா
ஆண்டு 10

# இந்தியாவில் நில நடுக்கம்

இந்தியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் - பூகம்பம் ஏற்படப் போகிறதென விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர். மத்தியஇமாலய மலைப் பகுதியில் இது ஏற்படலாம் எனச் சொல்லப்படுகிறது. எந்தவேளையிலும் இந்த ஆபத்து இடம் பெறலாமாம். இதனால் இப்பகுதியில் வாழும் கோடிக்கணக்கான மக்கள் பாதிக்கப் படுவர் எனவும், பல்வேறு நதிகளிலுமுள்ள அணைக்கட்டுக்களும் பாதிக்கப்படும் என்றும கூறுகிறார் கொலரடோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அறிஞர் றோஜர் பில்காம். இந்நிலநடுக்கம் பற்றிய எச்சரிக்கை ஒன்றை 'நியூ சயன்ரிஸ்ற்' எனும் பிரபல அறிவியல் ஏடு விடுத்துள்ளது.

இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தில் உத்தர்காசி பகுதிகளில் சில ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டனர். அந்தச்சிதைவுகளின் புனர் நிர்மாண வேலைகள் இன்னும் கூடத் தொடங்கப்படவில்லை. அண்மையில் மகாராஷ்டிரத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் வடு இன்னும் மாறவில்லை. இவ்வேளையில், இன்னுமொருநிலநடுக்கம் ஏறபடும்என்றஅறிவிப்பு இந்தியாவை அதிர்ச்சியிலாழ்த்தியுள்ளது.

**நண்பன்!**




என் இனிய நண்பன் சாளரத்திற்கு:- சாளரம் வாசித்து வரும் பல்லாயிரக்கணக்கானோரில் நானும் ஒருவன். சாளரத்தை வாசிப்பதனால் புரியாத பல விடயங்களையும் புரிந்து கொள்கின்றேன்.

கே. கே. அம்பிக்குமார்
மாமுனை, தாளையடி.

**ஏன் வரவில்லை?**

எமது அறிவுப்பசிக்குத் தீனியிடும் சாளரம் இதழை மாதாமாதம் படித்து வந்தேன். ஆனால், எமது பாடசாலைக்குச் சாளரம் மூன்றாம் ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ் மட்டுமே இறுதியாக வந்தது. அதற்குப்பின் எந்த இதழும் அனுப்பப்படவில்லை இதனையிட்டு நாம் கவலையடைகின்றோம். தொடர்ந்து எமக்குச் சாளரம் கிடைக்க ஆவன செய்யவும்.

ஆ. சுபாஸ்கரன்
கிளி/ கண்டாவளை ம. வி.

**திருப்தியும், மகிழ்வும்!**

பெப்ரவரிமாத சாளரம் படித்தேன். விடயங்கள் யாவும் பிரயோசனமுள்ளவையாகவும் அதேசமயம் சுவையானதாகவும் அமைந்திருந்தன. நிலாமுற்றத்தில் எமது உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தனின் பாடல் வரிகள் விழிகளில் நீரை வரவழைத்துவிட்டன.

54 பக்கங்கள் கொண்ட சாளரம் இதழ் 15 ரூபாவிற்குக் கிடைத்தமை திருப்தியும், மகிழ்ச்சியும் ஏற்படக் காரணமாயிற்று.

ச. இராகவன்
ஆனைக்கோட்டை.

## ஒரே ஓர் இதழ்

பெப்ரவரி சாளரம் கவர்ச்சியான அட்டையுடன் கைக்கடக்கமான அளவில், பல தரப்பட்ட கட்டுரைகளை அடக்கி வெளிவந்தமை பாராட்டத்தக்கது. அறிவியல், மருத்துவம், இலக்கியம் உளவியல், விளையாட்டு, அரசியல் என அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கி, தமிழீழத்தில் வெளியாகும் ஒரேஒரு மாத இதழ் சாளரம்தான் என்கிற பெருமையினை தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ளவும்.

வ. சிவநேசன்
பண்டத்தரிப்பு

## விளம்பரங்களிலும் பயன்

இப்போது சாளரம் இதழில் புதிய மாற்றங்களைக் காணக்கூடியதாகவிருக்கின்றது. விளம்பரங்கள் பிரசுரமாகும் பகுதிகளிற் கூட பிரயோசனமான விடயங்கள் தரப்படுகின்றன. அதனால் விளம்பரங்கள்கூட, வாசகரைக் கவரக்கூடியதாகவுள்ளன. 'ஆங்கிலம் கற்போம், சமகாலப்பிரச்சனைகளைக் கொண்டு தயாரிக்கப்படுவதால், ஆர்வத்துடன் கற்று வருகிறோம்.

நா. கலைமகள்
வெற்றிலைக்கேணி

---

## உலகில் வேகம் கூடிய மிருகம்

உலகத்திலேயே மிக வேகமாக ஓடக்கூடிய மிருகம் சீட்டா (Ceetah) எனப்படும் சிறுத்தை தான் அதனுடைய அதிகபட்ச வேகம் நூறு கிலோ மீற்றர் வரை என கணக்கிட்டுள்ளனர்.

இச்சிறுத்தைப்புலி பெரும்பாலும் ஆபிரிக்கக் கண்டத்திலும் தென்கிழக்காசியாவிலும் அதிகம் காணப்பட்டன. இவை நூற்றுக்கணக்கில் வேட்டையாடப்பட்டதால் அழிந்து போயின. இவ்வின சிறுத்தை வேகமாக அழிவதைக்கண்ட ஆராய்ச்சியாளர்கள், இவற்றை விலங்கியல் பூங்காக்களில் வைத்துப் பாதுகாக்க முடியுமா என திட்டமிட்டபோதிலும், அவை மிக கடினமான காரியமாகவுள்ள. அடிக்கடி நோய்வாய்ப்படுவதும், அதன் குட்டிகள் அடிக்கடி இறந்து விடுவதுமாக பல சிரமங்களை பராமரிப்பாளர்கள் எதிர்நோக்குகின்றனர்.

# பொது அறிவுப் போட்டி - 10

1) இரண்டாம் உலகப் போரின்போது பிரித்தானியப் பாரிய கடற்படைக்கப்பலைத் தற்கொலை மூலம்தகர்த்த வீரனான சுசுக்கி இந்த நாட்டைச் சேர்ந்தவன்–

(i) இத்தாலி (ii) ஜப்பான் (iii) அமெரிக்கா

2) விண்வெளிக்கு முதன் முதலாக அனுப்பிவைக்கப்பட்ட செய்மதியான 'ஸ்புட்னிக்' இந்த நாட்டினுடையது–

(i) அமெரிக்கா (ii) பிரான்ஸ் (iii) ரஷ்யா

3) தமிழீழத் தேசியத்தலைவர் வே. பிரபாகரன் அவர்களுடைய விடுதலைப் போராட்டம் பற்றிய பேட்டியை முதன் முதலிற் பிரசுரித்த ஏடு இது–

(i) சண்டே (Sunday)
(ii) இந்தியா ருடே (India Today)
(iii) த ஐலண்ட் (The Island)

4) உலகில் இராணுவப் பாதுகாப்பிற்காக மிகவும் குறைந்தளவில் செலவு செய்யும் ஒருசில நாடுகளில் இதுவும் ஒன்று–

(i) சுவிற்சலாந்து (ii) பாகிஸ்தான்
iii) கியூபா

5) விண்வெளியில் நடந்த முதற்பெண்மணி இவர்–

(i) சியாகி முகாய்
(ii) ஸ்வெல்த்லேனா சவித்ஸ்கயா
(iii) கத்தரின்

6) உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு வித்திட்டவர் எனப் போற்றப்படுபவர் இவர்–

(i) கி. ஆ. பெ. விஸ்வநாதம்
(ii) தனிநாயகம் அடிகள்
(iii) அறிஞர் அண்ணாத்துரை

7) உயரமான் ஓரிடத்தில் இருக்கும்போது பயப்படுகின்ற உளநோயை இவ்வாறு அழைப்பர்?

(i) ACRO PHOBIA
(ii) AGRA PHOBIA
(iii CLAUSTROPHOBIA

8) மகளிர் ரெனிஸ் விளையாட்டில் முடிசூடா ராணியாகத் திகழ்ந்த மார்ற்றினா நவரற்றின லோவா இந்த நாட்டைச் சேர்ந்தவர்–

(i) ஆபிரிக்கா (ii) இந்தியா
(iii) அமெரிக்கா

## பொது அறிவுப் போட்டி 9 இற்கான விடைகள்

1) யாழ் மாவட்டத்தில் ஏறக்குறைய 1,20,000 பேர் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

2) கிறிஸ்மஸ் நாளன்று தேவாலயங்களில் பாடப்படும் உலகப் புகழ் பெற்ற 'அமைதியான இரவு' என்ற கீதத்தை இயற்றியவர் வண. யோசப் மொஹார்

3) 'மஞ்சள் நதி' என்றழைக்கப்படுகின்ற நதி குவாங்கோவில் உள்ளது.

4) முதல் முதலாக விண்வெளிக்குச் செய்மதியை அனுப்பிய நாடு சோவியத்யூனியன்

5) தமிழீழத்தில் நன்னீர் மீன்பிடிப்பு கூடுதலாக நடைபெறும் மாவட்டம் திருகோணமலை

6) 'உயிர்களின் ஆரம்பம், என்ற விஞ்ஞான ஆய்வு நூலை எழுதியவர் சிறில் பொன்னம்பெருமா

7) இதுவரை கிட்டத்தட்ட 4000 செய்மதிகள் விண்வெளிக்கு அனுப்பப்பட்டுள்ளன.

8) உடலின் நிறை அளவுக்கதிகமாக அதிகரிக்கும் போது மாரடைப்பு ஏற்படும் அபாயமுள்ளது.

சரியான விடைகளை எழுதியுள்ளவர்களில் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்

**முதலாம் பரிசு 250 ரூபா**

தம்பையா யோகராசா
உபதபாற் கந்தோர் ஒழுங்கை
சரசாலை தெற்கு
சாவகச்சேரி

**இரண்டாம் பரிசு 150 ரூபா**

பா. பிரதீபன்
(ஆண்டு 9)
ஹாட்லிக் கல்லூரி
பருத்தித்துறை

**மூன்றாம் பரிசு 100 ரூபா**

ஸ்ரீ. பிரசன்நாத்
கொக்குவில் இந்துக்கல்லூரி

சாளரம் வழங்கும் இப்பரிசில்களைச் சாளரம் அலுவலகத்தில் சனிக்கிழமைகளில் பகல் 12 மணிக்கு முன்னதாக வந்து பெற்றுக்கொள்ளலாம். நேரில் வர முடியாதவர்கள் கடிதம் மூலம் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

# ஈழத்தில் ஓவியக்கலை - ஒரு கண்ணோட்டம் - 3

பிரதிக் கல்விப்பணிப்பாளரும், நவீன ஓவிய அபிமானியும், சிறந்த நீர்வண்ண ஓவியரும், மிக நல்ல சிற்பியும், - இப்படிப்பல தகைமைகளைப் பெற்ற திரு. ரமணி அவர்கள் பால பாஸ்கரனின் ஓவியக்கருத்துக் குறித்தும், தமிழீழ ஓவியக்கலை வளர்ச்சி பற்றியும் கூறுகையில், 'தேடலும், படைப்புலகமும்' என்ற புத்தகத்தை வைத்துக்கொண்டு மட்டும் விமர்சிப்பது தவறு; இந்தப் புத்தகம் வெளிவந்து 6 அல்லது 7 ஆண்டுகள் ஓடிவிட்டன. இந்த 7 ஆண்டுகளில் நாம் கணிசமான முன்னேற்றம் அடைந்துள்ளோம் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. இந்தக் குறிப்பிட்ட 7 ஆண்டுகளில் இப்போராட்ட காலத்தில் தான் சமுதாயத்திற்குக் கலைப்படைப்புக்களின் தேவை ஏற்பட்டுள்ளது. பொருளுதவி அளிப்பவர்களும் இருக்கிறார்கள். எனினும் மற்றைய நாடுகளோடு ஒப்பிடுகையில் நாம் பின் தங்கிய நிலையில் இருப்பதையும் மறுப்பதற்கில்லை என்கிறார். இதற்குப் பல காரணங்களையும், அதற்கான பரிகாரங்களையும் நம் முன் வைக்கின்றார்.

சித்திரக் கல்வி ஆசிரியர்களின் தகுதிக்குறைவும், பற்றாக்குறையும், பெற்றோர் ஆசிரியர்களிடையே ஓவிய சிற்பக் கலை பற்றிய அசிரத்தை; சிற்ப ஓவியக் கலைகளிற்கான உயர்கல்வி அற்ற நிலை; வாய்ப்பு அற்ற நிலை - இவை முக்கிய காரணங்கள். O/L தகுதி பெற்றவர்கள் கூட ஆசிரியர்களாக வரும் நிலை. A/L ஐ விடவும் இத் துறையில் அதிகமான தகுதி பெற்றவராயிருந்தால் நலம். பெற்றோர் ஆசிரியர் பிள்ளைகளை ஊக்கப் படுத்துதல். ஓவிய - சிற்ப உயர் கல்விக்கு வழிகாணுதல், சிறந்த ஓவியப்பள்ளி ஒன்றை அமைத்தல். மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த, தொடர்ச்சியான கண்காட்சிகள் வைத்தல், கலைஞர்களுக்குப் பொருளுதவி அளிப்பவர்கள் தொடர்ந்து உதவுதல் - இவற்றின் மூலம் நாம் எதிர்பார்க்கும் முன்னேற்றம் அடைய முடியும்.

புதிதாக என்ன நிகழ்ந்து விட்டது? எதற்காக இத்துணை ஆர்ப்பாட்டம்? ஓவிய சிற்பக்கலைக்குத் திடீரெனத் தேவை ஏன் ஏற்பட்டது? என்ற பலரின் புருவஉயர்

தல்களை நான் காண்கின்றேன். பாலபாஸ்கரனின் கருத்துக்களைத் தேடிப்பெற்றேனா? இல்லை. நிச்சயமாக இல்லை. உண்மையில், நாம் வாழ்ந்து கொண்டிருப்பது ஈழச் சரித்திரத்தின் மிகமுக்கியமானகாலகட்டத்தில் இதைமறுப்பதற்கோ, சந்தேகிப்பதற்கோ இடமில்லை. இக்கால கட்டங்களில்தான் சமூகத்தில் கலை இலக்கிய வளர்ச்சி மிக உயர்ந்த இலக்கை அடைந்து, தன் ஆளுமையை முழுவீச்சுடன் செயற்பட வைத்து, அடுத்த தலைமுறையினருக்கு முன்மாதிரியாக விளங்கச் செய்கின்றன. சமுதாயத்திற்கு, அதன் பண்பாட்டுக் கோலங்களை வெளிக்காட்டும் கலை, இலக்கிய வளர்ச்சி மிக இன்றியமையாதது. முக்கியமாக ஓவிய – சிற்பக் கலைஞர்களுடன் நான் பகிர்ந்து கொள்ள விரும்புவதும் அதைத்தான். இதில் சர்ச்சைகளும், விவாதங்களும் முக்கிய பங்குவகிக்கும். இதில் ''கலை'' விமர்சிக்கப்படுமே தவிர, தனி மனித (கலைஞர்களை) விமர்சனமாக அமையாது. இதில் வருத்தத்திற்கோ, கோபத்திற்கோ இடமளித்தல் கூடாது. எங்கு ஒரு கலைஞன் தன்னைத் தானே விமர்சித்துக் கொள்கிறானோ, அவனே சிறந்த கலைஞனாகவும் ஆகிவிடுகின்றான். சிறந்த ரசிகனாக முடியாதவன், கலைஞனாகவும் முடியாமற் போகின்றது. சர்ச்சைகள் மூலம் தெளிவு பிறக்கும்; தெளிவுற்றுப் பிறந்த படைப்புக்கள் வரும்சந்ததியினருக்குச் சொல்லப் போகும் செய்திகள் மிகுந்த கலை நுணுக்கங்களுடனும் (கலையைப் பொறுத்த மட்டில் நாம் யாரையும்விடக் குறைந்தவர்கள் அல்லர் என்பதையும் பறைசாற்றி) – சமகால நிகழ்வுகளை, நிச்சயமான உண்மைகளைத் தெரிவிப்பதாயும், நாம் நசுக்கப்படும் அவலத்தை மீறும் நம்போராடும் உளவுரத்தை, ஈன்றெடுக்கும் வெற்றியை - நம் ஒவ்வொ உணர்வுத் துளியையும் கலையாக மிளிரவைக்க வேண்டுமெனில் நாம் பல இடையூறுகளையும், விமர்சனங்களையும் சந்திக்க வேண்டிய கட்டாயம் ஏற்படத்தான் செய்யும். சில குறிப்பிட்ட விடயங்களில் நாம் அதிகக்கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

1. நமக்கென்று பாரம்பரியக் கலை ஏதுமில்லை. (A Sweepig-Remark) சிங்களவர்களைப்போல் நாமும் நமக்கென்ற ஒன்றை உருவாக்கமுடியும். மேலதிக விபரங்களுக்கு '(Story of the Singales Arts)' புத்தகத்தைப்பார்க்கலாம் கலைஞர்கள் தொடர்முயற்சியும் விவாதங்களும் நல்ல முடிவினைத் தரும். முது பெரும் பழுத்த மரபுக்

கலை ஓவியர் திரு. சர்மா அவர்கள் நம்பிக்கை தெரிவிக்கிறார்.

2. சித்திரக் கல்வியின் மறுசீரமைப்பு:-

ரஸ்கின் போன்ற கலைவிமர்சகர் ரேகைகளின் முக்கியத்துவம் பற்றிக் கூறுகின்றார். ஓவியம் கோடுகளிலிருந்து தான் கற்பிக்கப்பட வேண்டும். தான் எடுத்துக் கொண்ட பரப்பில் (Frame) ஒழுங்கான கட்டமைப்பில் (Composition) உருவங்களை ஒழுங்கு செய்ய (Arrangement) தெரியாது போனால், பின்பு (Abstract) கருத்தியல் செய்ய முடியாது. சங்கீதத்தின் ஆரம்பம் சுருதிலயம் பற்றி அறிவது போல இடவமைவு, வகையமைவு, லயம் (Rythem) வர்ண இசைவு ஆகிய அம்சங்கள் எல்லாம் பொருந்தி (Harmony) உருவாக்கும்அறிவைச் சிறுவயதிலேயே கற்பித்துவிட வேண்டும். அவரவருடைய பாணி (Style) எப்படியிருப்பினும், இயற்கையைப் பார்த்துக் கிரகிக்கக் கூடிய தன்மை (Observation) பெற்றுவிட வேண்டும். கற்பித்தலின் சில தவறுகளினால் பிள்ளைகளின் (Creative ability) ஆக்கத்திறன் இழந்துவிடக் கூடிய அபாயம்உண்டு. உதாரணம்:-புத்தகங்களில் வந்தபடங்களைப்பார்த்துப் பிள்ளைகளை வரையச் சொல்லுதல். மேலும், இயற்பண்பு ஓவியம் கற்காமல் நவீன ஓவியம் கற்பது அடிப்படை அறிவை ஞானசூன்யமாக்கிவிடும். இதையே இரண்டு கல்வி அதிகாரிகளும், ரமணி, ராஜரத்தினமும் அறிவுறுத்துகின்றார்கள்.

3. ஓவியம் கற்றபின் (One man show) கண்காட்சிகள் வைப்பதன் மூலம், மக்களையும் மறைமுகமாகப் பழக்கப்படுத்தலாம்.

4. ஓரளவு படித்த ஆர்வமுள்ள மாணவர்கள் தனிப்பட்ட ஓவியங்களைப் பற்றிய புத்தகங்களை விட, விமர்சன நோக்கில் எழுதப்பட்ட புத்தகங்களைப்பார்த்து, படங்களுடன் ஒப்பிட்டு உணர்ந்து, அறிந்து கொள்வது அவசியம்.

சில விமர்சகர்களின் பெயர்களைத் தருகிறேன்.

01. ரஸ்கின் 2. மேரி சாமொட்
03. லுலிங் குக் எம். ஏ.
04. ஆர். ஆர். டொம் லின்சன் ஏ.ஆர். சீ. ஏ. ஆர். பி. ஏ.
05. சார்ள்ஸ் ஹீலர் சீ. பி. ஈ, ஆர். ஏ;
06. பிரட்ரிக் ஹாட்;
07. கெனத் கிளாக்;
08. ரோஜஃப்ரே;
09. ஹார்வேடே.
10. ஹொபட் ரீட்;
11. கோம்பிரிச்

5. யாழ்நகரைத் தவிர்ந்த ஏனைய இடங்களில் ஓவிய வளர்ச்சி – கிழக்கில் முயற்சிகள் பற்றி சூழல் காரணமாக அறிய முடியாத நிலை. கிராமங்களில் பெரிதான முயற்சிகள் இருப்ப தாகத் தெரியவில்லை. ஈழத்தின் கிழக்குப் பகுதியின் ஆக்கங்கள் பற்றி என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை.

6. ஓவிய சிற்ப உயர்கல்வி:– 1957ம் ஆண்டிற்கு முன்னரே முயன்றும் இன்றுவரை இதற்கு முடிவுகாணாதது வருந்தத்தக்கது. இதற்கென சிறந்த பள்ளி ஒன்று கட்டாயம் தேவை. இப்பள்ளியில் எல்லாவித உத்திகளும், பாணி களும் (Fine Arts, Commercial Arts) பயிற்றுவிக்க வேண்டும். இதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுப்பார்கள் என நம்புவோம்.

7. கலைஞர்கள் தங்களுக்குள் எவ்விதத் தொடர்புகளையும் வைத்துக் கொள்வதில்லை. இத னால் வாத விவாதங்களுக்கு இடமில்லாமற் போகின்றது.

8. தற்காலச் சூழலில் கலை வளர்ச்சி:–

தீர்க்க தரிசனத்துடன், கலை கலாசாரத்தின்சமூகத் தேவையை உணர்ந்து இதற்கெனத் தனித் துறையை (கலை பண்பாட்டுக் கழகம்) நிறுவிய தலைவர் அவர் களுக்கும் நாம் கடமைப்பட்டுள் ளோம். தற்காலக் கலை வளர்ச் சிக்குக் காரணம் நம் போராட் டச் சூழலே. இச் சூழலில் ஒவ் வொரு கலைஞனும் தன்னை வெளிக்காட்டிக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது என் கின்றார் ரமணி. நம் சமூகமும் நம்மிடமிருந்து எதிர்பார்ப்பதும் சமகால நிகழ்வுகளை, போராட் டங்களைச் சித்திரிப்பதன் மூலம் இன்று மட்டுமல்ல என்றென்றும் நம் வரும்காலச் சந்ததியினருக்குச் சொல்லக் கூடியதாக நம் படைப் புக்கள் அமைதல் வேண்டும்.

எத்தனையோ மாவீரர்களின் படங்கள் உயிரோவியங்களைத் தீட்டுவதால் (Mechanical) ஆக முயற்சித்தாலும்) A mass production)பெரும் எண்ணிக்கையிலான கலைஞர்களை உருவாக்கும் வாய்ப்புஏற்பட்டிருக்கிறது.

இளங் கலைஞர்களை உருவாக் குவதில் சிவப்பிரகாசம், மார்க் முன் நிற்கின்றனர் போஸ்ரார். கள், புத்தகங்களினாலும் தற் போது வாய்ப்பு ஏற்பட்டிருக்கின் றது.

தேவைகளை மனதிற்கொண்டு உடன் செயற்படுவோமானால் அடுத்த பத்து ஆண்டுகளில், உலகின் மற்றைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் நமக்கும் நமக்குரிய அங்கீகாரம் கிடைக்கும் என்ப தில் சிறிதும் சந்தேகமில்லை.

# ஆங்கிலம் கற்போம் -11-


| | | | |
|---|---|---|---|
| **Suresh**:- Hello, what are you doing here? Can I join you for a cup of tea? | — | சுரேஷ்:- | நீர் இங்கு என்ன செய்கின்றீர்? தேநீர் அருந்துவதற்கு நான் உம்முடன் வரமுடியுமா? |
| **Ravi**:- Yes please sit down. Waiter, can you bring two cups of tea, please. | — | ரவி:- | ஆம். தயவு செய்து உட்காருங்கள். தயவுசெய்து இரண்டு கோப்பைகள் தேநீர் கொண்டுவாருங்கள். |
| S:- I have not been to this cafe before. It's nice and clean. | — | சுரேஷ்:- | முன்னொரு பொழுதிலும் இந்தச் சிற்றுண்டிச்சாலைக்கு நான் வந்ததில்லை. இது திருப்தியாகவும், சுத்தமாகவுமிருக்கின்றது. |
| R:- I often come here for that reason. A few months ago I went to another cafe, across the road, and had a cup of tea and a piece of cake. An hour later I was vomiting. I had severe stomach pain and diarrhoea. | — | ரவி:- | அக்காரணத்திற்காகவே நான் இங்கு அடிக்கடி வருவதுண்டு. ஒரு சில மாதங்களுக்கு முன் நான் வீதிக்குஅப்பாலுள்ள இன்னுமொரு சிற்றுண்டிச்சாலைக்குச் சென்று, ஒரு துண்டு அப்பமும் ஒரு கோப்பைத் தேநீரும் அருந்தினேன். ஒருமணி நேரத்தில் நான் வாந்தியெடுத்தேன். எனக்குக் கடுமையான வயிற்றுவலியும், வயிற்றோட்டமும் ஏற்பட்டன. |

| | | | |
|---|---|---|---|
| S:- | What was the problem? | சுரேஷ்:- | என்ன பிரச்சினை? |
| R:- | It was food poisoning. The standards of hygiene in that cafe were not very high | ரவி:- | உணவில் நஞ்சு ஊறிவிட்டது. அந்தச் சிற்றுண்டிச்சாலையில் சுகாதார விதிகள் நன்றாகக் கடைப்பிடிக்கப்படவில்லை. |
| S: | Why? What was wrong with that cafe? | சுரேஷ்:- | ஏன்? அந்தச் சிற்றுண்டிச்சாலையில் என்ன தவறு? |
| R: | It was a small dingy cafe. There were flies everywhere. The food was not covered. The waiters didn't maintain their personal hygiene. | ரவி:- | அது ஒரு சிறிய இருளடைந்த சிற்றுண்டிச்சாலை. எல்லாவிடத்திலும் ஈக்கள் காணப்படுகின்றன. உணவுகள் மூடி வைக்கப்படவில்லை. அங்கு பணிபுரிவோர் தங்களது சொந்தச் சுகாதார ஒழுங்குகளைப் பேணவில்லை. |
| S:- | Yes, it is important that the people working with fresh food in public eating houses should uphold certain standards of health and cleanliness. | சுரேஷ்:- | ஆம். பொதுவான சாப்பாட்டுச்சாலைகளில் புதிய உணவைப் பரிமாறுவோர் சுகாதாரம் சுத்தம் சம்பந்தமான சில விதிகளைக் கட்டாயமாகக் கடைப்பிடிக்கவேண்டியமை முக்கியமானதாகும். |
| R:- | We must have guide lines and regulations defining the standard of public health in society. | ரவி:- | சமுதாயத்திலிருக்கவேண்டிய பொதுச் சுகாதாரத்தின் தரத்தை வரையறுக்கும் வழிகாட்டி நெறிகளும் விதிகளும் எங்களிடம் இருக்க வேண்டும். |
| S:- | We do have public health laws. But public health laws alone are often | சுரேஷ்:- | பொதுச் சுகாதாரச் சட்டங்கள் எங்களிடமுண்டு. அநேகமாகப் பொதுச் |

(மிகுதி 40 ஆம் பக்கம் பார்க்க)

# வான்வரை பாய்ந்துள்ள புலிகள்

ஏப்ரல் 28ஆம் திகதி மாலை 4.25 மணிக்குப் பலாலி விமானத் தளத்திலிருந்து புறப்பட்ட எச். எஸ் 748 ரக அவ்ரோ விமான மொன்று புறப்பட்ட ஐந்து நிமிடங்களிலேயே தீப்பற்றி எரிந்தது. வானில் தீக்கோலத்தில் தள்ளாடிய அந்த 'அழகைப்' பொது மக்கள் பலரும் ஆரவாரத்துடன் பார்த்து ரசித்தனர்.



மீண்டும் சிரமப்பட்டு பலாலித் தளத்தை நோக்கித் திரும்பிச் செல்ல முற்படுகையில் அது வெடித்துச்சிதறியது. அதனுடன் 38 படையினரும் துகள்களாகச் சிதறினர். கோப்பாய் புத்தூர், நீர்வேலி, அச்சுவேலிப் பகுதிகளில் அச்சிதறல்கள் விழுந்தன.

அடுத்தநாள் 29 ஆம் திகதி காலை சுமார் 7.20 மணிக்கு அநுராதபுர விமானத்தளத்திலிருந்து இன்னோர் அதேரகவிமானம் பலாலி நோக்கிப் பறந்து வந்தது. முதல்நாள் விபத்தை விசாரித்தறிவதற்காகவும், வேறு அலுவல்களுக்காகவும் முப்படையைச்சேர்ந்த 49 பேர் உட்பட 52பேர் அதில் வந்தனர். 30பேர் இராணுவ அதிகாரிகள், 5பேர்

கடற்படை அதிகாரிகள், 12பேர் விமானப்படைஅதிகாரிகள், 2பேர் பொலிஸ் அதிகாரிகள், மூவர் அரச செய்தியாளர்.

இந்த விமானமும் பலாலி விமானத்தளத்தை அண்மிக்கும் போது தீப்பற்றி வெடித்து புத்தூர், நவக்கிரிப்பகுதிகளில் சிதறி வீழ்ந்தது.

இந்த இரு விமானங்களையும் விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப்படையினர்சுட்டு வீழ்த்திய செய்தி 30 ஆம் திகதி பத்திரிகைகளிற் பரபரப்புடன் வெளியானது.

தற்போது ஆரம்பித்துள்ள மூன்றாம் கட்ட ஈழப்போரின் ஆரம்பக்கட்டமே விடுதலைப் புலிகளின் போராட்ட வளர்ச்சியின் முக்கியமான இன்னொரு பரிமாணத்தை உலகெங்கும் பறைசாற்றியது.

தரையில் இராணுவ நகர்வுகளைக் கட்டுப்படுத்தி, தாயகத்தின் பல பிரதேசங்களைத்தன்வசமாக்கி பின் கடலிலும் சிறீ லங்காவின் கடற்படை நகர்வுகளைக் கேள்விக் குறியாக்கி,இன்று வான்பரப்பினையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கும் விடுதலைப் புலிகளின் கட்டம் சட்டமான வளர்ச்சி உலகின் புருவங்களை உயரவைத்துள்ளது. சிங்களப் பேரினவாதம் இன்று நிலைகுலைந்து போயுள்ளது.

பூநகரிப் பாதையைப் பொதுமக்கள் போக்குவரத்திற்குத் திறந்து விட்டால், பாரிய இராணுவ விளைவுகள் தோன்றும்எனக்கூறிய அரசு இன்றைய விளைவுகள் குறித்து என்ன செய்யப் போகிறது?

பேச்சுவார்த்தை முறிவடைந்ததும் சிரமம் நிறைந்த தமிழ் மக்களின் ஒரேயொரு கடற்பாதையான கிளாலியையும் தடை செய்த சிறீ லங்கா அரசிற்கு, தனது படையினர் சுதந்திரமாகப் பயணம் செய்த ஒரேயொரு வான்பாதையையும் புலிகள் தடை செய்தமை சரியான நடவடிக்கைதான்.

அரசு அமைதிப் பேச்சுவார்த்தை என்று ஒரு புறம் காலங் கடத்திக் கொண்டிருக்க, ''விடு ஒருகை பார்க்கின்றோம்'' என்று திமிறிக் கொண்டிருந்த இராணுவத்தின் இன்றைய நிலை என்ன?

தமக்கிருந்தஒரேயொரு பலமான விமானப்படையும் ஸ்தம்பிதமானதும், எந்த நேரமும் தங்கள் முகாம்கள் தாக்கப்படலாம் என்று உளரீதியாக அவர்கள் பாதிப்புற்றுள்ளனர்.

சிறீ லங்கா அரசும் அதன் பேரினவாதப்படையும் தங்களுக்குத் தாங்களே தேடிக் கொண்ட கேடு இது.

இரண்டாவதாக வீழ்த்தப்பட்ட விமானத்தை ஓட்டிவந்த வீரர் ''ஏவுகணைவருகிறது'' எனச் சத்

தமிட்டாராம், என அரச செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த விமானங்கள் குண்டுகளைப் பொழியும் போது தமிழ் மக்கள் இட்ட மரண ஓலம் எப்படிக் கேட்டிருக்கும் என அரசு இனி ஆராய்ந்து பார்க்கலாம்.

விமானம் விழுந்து சிதறிய இடத்தில் பிண நாற்றம் வீசுகின்றதாம். விமானங்கள் குண்டு போட்டதால் சிதறிய தமிழ் மக்களின் அவயவங்களும் இப்படித்தான் நாறின. இதே அவ்ரோ விமானம் இரண்டாம் ஈழப்போரின் போது தமிழ் மக்கள் மீது மலத்தை அள்ளிவந்து வீசியபோதும் இப்படித்தான் நாற்றமடித்தது.

''வினை விதைத்தவன் வினை அறுப்பான்'' என்கிற பழமொழி இன்றைய நிலையில் உண்மையாகவே தோன்றுகிறது.

விமானத்தைத் தாக்கியது, புலிகள் சொல்லுவது போல நவீன தன்னியக்க 'ஒலிகன்' தானா- அல்லது ரஷ்ய 'சாம்' ஏவுகணையா? இல்லா விட்டால் வேறு ஐரோப்பியத் தயாரிப்பா? என்றெல்லாம் இப்போது அரசு ஆராய்ந்து கொண்டிருக்கின்றது. உண்மையில் ஆராயப்பட வேண்டிய ஆழமான பிரச்சினைகளைத் தேடிக் கண்டுபிடிக்காத வரையில் சிறீலங்கா அரசிற்கு எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை.

— புலி

---

insufficient. We must ensure that they are efficiently implemented.

R:- Isn't that the work of the public health inspectors? —

S:- Yes, it's their responsibility. But health and cleanliness are fundamental to the well-being of the society. Everyone has a role to play in promoting high standards of public health. —

(37 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுகாதாரச் சட்டங்கள் மாத்திரம் போதாது. ஆனால் அவை திறமையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றனவாஎன்பதை நாம் உறுதிப்படுத்த வேண்டும்.

ரவி :- அது பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களின் பணியல்லவா?

சுரேஷ் :- ஆம்; அது அவர்களின் பொறுப்பு. ஒரு சமுதாயத்தின் நலத்திற்குச் சுகாதாரமும், சுத்தமும் அடிப்படையானவை. பொதுச்சுகாதாரத்தின் தரத்தை உயர்த்துவதில் ஒவ்வொருக்கும் பங்குண்டு.

# பாண்டியனின் கிளை நிறுவனங்கள்

- பாண்டியன்
  பல்பொருள்
  வாணிபம்
  கிளிநொச்சி
- பாண்டியன்
  உதிரிப்பாக
  வாணிபம்
  கிளிநொச்சி
- பாண்டியன்
  காலணிகள்
  வாணிபம்
  சிளிநொச்சி
- பாண்டியன்
  எரிபொருள்
  நிரப்பு நிலையம்
  கிளிநொச்சி
- பாண்டியன்
  உர விற்பனை
  நிலையம்
  கிளிநொச்சி
- பாண்டியன்
  தாள்வகை
  வாணிபம்
  கிளிநொச்சி
- பாண்டியன்
  பல் பொருள்
  வாணிபம்
  புதுக்குடியிருப்பு
- பாண்டியன்
  உதிரிப்பாக
  வாணிபம்
  புதுக்குடியிருப்பு
- பாண்டியன்
  பல் பொருள்
  வாணிபம்
  மல்லாவி
- பாண்டியன்
  உதிரிப்பாக வாணிபம்
  தண்ணீர் ஊற்று
- பாண்டியன்
  பல் பொருள் வாணிபம்
  தண்ணீர் ஊற்று



பா
ண்
டி
ய
ன்

- பாண்டியன்
  பல் பொருள் வாணிபம்
  நெடுங்கேணி
- பாண்டியன்
  பல் பொருள் வாணிபம்
  கனகராயன் குளம்

# பாண்டியன்

- ☐ உணவுப் பொருட்கள்
- ☐ வீட்டுப்பாவனைப் பொருட்கள்
- ☐ கட்டடப் பொருட்கள்
- ☐ உதிரிப்பாகங்கள்
- ☐ விவசாய உள்ளீடுகள்
- ☐ எரிபொருள் வகைகள்
- ☐ பாடசாலை உபகரணங்கள்
- ☐ அழகு சாதனப் பொருட்கள்
- ☐ மின்சார உபகரணங்கள்
- ☐ இலத்திரனியல் உபகரணங்கள்



வன்னிப்பிரதேசமெங்கும்
கிளை பரப்பி நிழல்தரும்
விருட்சமாக வளர்ந்துள்ள
நிறுவனம்!

# பாண்டியன்